# முஹம்மத் இறைத்தூதர் ஏன்?

ஆசிரியர் : M.M. அப்துல் காதிர் உமரி (MA Politics)

வெளியிடு : ஃபுர்கான் பப்ளிகேஷன்ஸ் ட்ரஸ்ட்

## வாழ்க்கைக் குறிப்பு

மனித சமுதாயம் தோன்றிய காலந்தொட்டு ஆன்மீகம், தத்துவம், அரசியல், வீரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தலைவர்கள் பலர் தோன்றியுள்ளனர். வரலாற்று ஏடுகள் இன்று வரையிலும் இதை மெய்ப்பித்துக் கொண்டு வருகின்றன. அவ்வாறு தோன்றியுள்ள தலைவர்களில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்)ழூ என்றழைக்கப்படும் தலைவரும் ஒருவர். வரலாற்று ஆய்வாளர்களும், சமூகச் சிந்தனையாளர்களும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைத் தங்கள் ஆய்வுகளில் சிறப்பித்துக் குறிப்பிடத்தவறியதில்லை. இன்றைய உலகில் காணப்படும் ஒவ்வொரு துறையிலும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்குப் பங்குண்டு என்பதை அதன் துறையைச் சார்ந்தோர் தெரிந்தே வைத்திருக்கிறார்கள். ஆனாலும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம்மை இறைவனின் தூதர் என்று சொன்னது மட்டும் எவராலும் தெளிவான ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம்மை இறைத்தூதர் என்று பிரகடனம் செய்தார்களே, உண்மையில் அது பெரும் ஆய்விற்குரியதாகும். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இறையியல் சார்ந்த வாழ்க்கையை ஆய்விற்குட்படுத்துவதற்கு முன்பு அவர்களின் வாழ்க்கைக் குறிப்பை மிகச்சுருக்கமாக அறிவது அவசியமாகிறது.

சவூதி அரபியாவிலிருக்கும் மக்கா மாநகரில் கி.பி 570 வது ஆண்டில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பிறந்தார்கள். அவர்கள் தம் தாயின் வயிற்றில் இருக்கும் போதே தந்தையை இழந்தார்கள். பின்னர் அவர்கள் பிறந்ததும் தம் நாட்டு வழக்கப்படி கிராமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். 'ஹலீமா ஸஅதிய்யா' என்றழைக்கப்படும் பெண்மணியிடம் பாலருந்தி வளர்ந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம்முடைய ஆறாவது வயதில் தாயையும் இழந்தார்கள். பின்னர் தம்முடைய பாட்டனார் அப்துல் முத்தலிப் அவர்களின் மேற்பார்வையில் வளர்ந்தார்கள். அப்போது அவர்களுக்கு வயது எட்டு. அவர்களுடைய பாட்டனார் அப்துல்முத்தலிப் அவர்களும் மரணப்பிடிக்கு உள்ளானார்கள். ஆதரவற்ற நிலையிலிருந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை, அவர்களுடைய பெரிய தந்தை அபூ தாலிப் அவர்கள் தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு எழுத்து அறிவோ படிப்பு அறிவோ சிறிதும் போதிக்கப்படவில்லை. இருப்பினும் அவர்கள் தம் புத்தி சாதுர்யத்தால் ஒழுக்கத்தில் மிகவும் சிறந்தவர்களாகவும், நேர்மைமிக்க வணிகராகவும் திகழ்ந்தார்கள். அவர்களால் ஏமாற்றமடைந்ததாக எவரையும் குறிப்பிட்டுக் காண்பிக்க முடியாது. அவர்களின் நேர்மை மற்றும் உயர்ந்த பண்பு ஆகியவை அந்த அளவிற்கு உயர்ந்து காணப்பட்டது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் இருபத்தி ஐந்தாவது வயதில் நாற்பது வயது நிரம்பிய விதவைப் பெண்மணி அன்னை கதீஜா(ரலி) அவர்களை மணந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் வணிகத் திறமையால் பெரும் செல்வந்தராகவும், தம் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குஉடையவராகவும், அன்றைய அரபு மக்கள் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்த குலத்தின் அடிப்படையில் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவராகவும் இருந்தார்கள். 'அல் அமீன்'- நம்பிக்கைக்குரியவர், 'அஸ் ஸாதிக்' - உண்மையாளர் என்னும் உயர்வான பல பட்டங்களையும்

பெற்றிருந்தார்கள். மக்கள் அவர்களுக்கு மரியாதை செய்வதிலும், கண்ணியமாக நடத்துவதிலும் சிறிதும் குறைவைத்ததில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் நாற்பது வயதை அடைந்த போது அவர்களுக்கு இறைவன் தன் தூதை அனுப்பினான். அவர்களுக்கு அது என்னவென்று புரியாமல் பயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அப்போது அவர்களின் மனைவி கதீஜா(ரலி) அவர்கள் தம் சிறிய தந்தையான வரக்கா இப்னு நவ்ஃபல் என்பவரிடம் அவர்களை அழைத்துச் சென்றார்கள். தம் கணவருக்கு நிகழ்ந்தவற்றை அவரிடம் கூறி விளக்கம் கேட்டார்கள். அத்தருணத்தில் வேதங்களில் ஞானம் பெற்றிருந்த வரக்கா இப்னு நவ்ஃபல் எனும் அறிஞர். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம், 'அவர்கள் இறைவனின் தூதர்' எனும் செய்தியைச் சொல்லி உண்மை நிலையை அறியச் செய்கிறார். அதன் பின்னரே இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் மக்களிடம் நான் இறைவனின் தூதர் எனும் செய்தியைச் சொல்கிறார்கள்.

அவர்கள் சொன்ன அச்செய்தி சாதாரணமான செய்தியன்று. சிலைகளைக் கடவுளர்கள் என வணங்கிக் கொண்டிருந்த மக்கள் அனைவரின் ஆழமான நம்பிக்கைக்கும் எதிரான செய்தி அது. மண்ணையும், கல்லையும், மரத்தையும், மிருகங்களையும், பறவைகளையும் மொத்தத்தில் படைப்பினங்களில் எதையும் வணங்கக் கூடாது எனும் செய்தி அது. மனிதனுக்கு மனிதன் அடிமையல்ல, அனைவரும் சமம் எனும் செய்தி அது. இறைவன் மட்டுமே உயர்ந்தவன். மனிதர்களில் யாரும் யாரையும்விட உயர்ந்துவிட முடியாது எனும் செய்தி அது. சுருக்கமாகச் சொன்னால் அன்றைய மக்களின் கலாச்சாரத்திற்கு முற்றிலும் எதிரான மாறுபட்ட செய்தி அது. இதைச் செவியேற்ற மக்கள் சற்றும் சிந்தனையின்றி, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீது கோபம் கொண்டு கொதித்தெழுந்தார்கள் வசைபாடினார்கள். ஆனாலும் அதற்கெல்லாம் அஞ்சாது இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைவழியில் சத்தியப் பிரச்சாரத்தை முன்வைத்தார்கள். எதிர்ப்புகளைக் கண்டு துவண்டு விடாமல் தொடர்ந்து இறைச் செய்தியை மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அன்று வரை உயர்த்திப் பாராட்டி வந்த மக்கள் வசை பாடுதலையும், துன்புறுத்துதலையும் வாடிக்கையாக்கிக் கொண்டார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தோழர்களையும் மிகக்கடுமையான முறையில் அவர்கள் கொடுமைப்படுத்தினார்கள். இக்கொடுமைகளுக்கு மத்தியில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பதிமூன்று ஆண்டுகாலம் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று தயக்கமின்றிக் கூறிக்கொண்டிருந்தார்கள்.

முஹம்மத்(ஸல்) அவர்களை மக்கள் கடுமையாக எதிர்த்தனர் அவர்களையும், அவர்களின் ஆருயிர்த் தோழர்களையும் கொடுமையாகத் துன்புறுத்தினர். எனவே இறைவனின் வழிகாட்டுதலுக்கேற்ப இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் மதீனா என்னும் நகர் நோக்கி, ஹிஜ்ரத் என்னும் புனிதப்பயணம் மேற்கொண்டார்கள். அங்கு அவர்கள் இறை கட்டளையின் அடிப்படையிலான இஸ்லாமிய அரசு ஒன்றை நிறுவி, அதன் படி ஆட்சியமைத்துச் செயல்பட்டு வந்தார்கள். மதீனா ஒரு தேசமாகமாறியது. அதன் பின்னர் மனித சமுதாயத்திற்குத் தேவையான அனைத்துச் சட்டங்களையும் இறைவனிடமிருந்து பெற்றுக் கொடுத்தவர்களாகத் அறுபத்து மூன்றாவது வயதில் காலமானார்கள். "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்." (நாம் அனைவரும் இறைவனிடமிருந்தே வந்துள்ளோம் மீண்டும் அவனிடமே நாம் அனைவரும் செல்லவிருக்கின்றோம்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை முஸ்லிம்கள் தங்கள் உயிரினும் மேலாக மதித்து, அவர்கள் மீது நேசம் கொண்டிருக் கிறார்கள். அவர்களின் கட்டளைகளைச் சிறிதும் மாற்றமின்றி, அப்படியே நிறைவேற்றி வருகிறார்கள். இன்றைய உலகில் இஸ்லாமிய மார்க்கம் பெருமளவில் பரவிக்

கொண்டுள்ளது. எனவே இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம்மை இறைவனின் தூதர் என்று கூறியதை ஆய்விற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் என்றால், பேரும் புகழுடன் வாழ்ந்த மற்ற தலைவர்களின் நிலை என்ன? அவர்கள் யார்? என்பது போன்ற வினாக்களுக்கு விடை கண்டாக வேண்டும். முஹம்மத்(ஸல்) அவர்களை இறைவனின் தூதர் என்று முஸ்லிம்கள் எந்த அடிப்படையில் நம்புகிறார்கள் என்பதைச் சற்று உற்று நோக்க வேண்டும். அவ்வாறான ஓர் ஆய்வையே இங்கு சமர்ப்பிக்கிறேன்.

## தேசியவாதம்

ஒரு தேசம் தன் நாட்டைச் சார்ந்தவர்களாலோ, பிற நாட்டவர்களாலோ அடக்கு முறைக்குட்பட்டிருக்கும் போது, தேசியவாதம் உருவாகிறது. இயற்கையாகவே அச்சசூழல் ஒரு தலைவர் உருவாகக் காரணமாகிறது. இதன் அடிப்படையில் பல தேசங்களில் தலைவர்கள் தோன்றியுள்ளார்கள் என்பது சரித்திரங் கண்டுள்ள உண்மை! இன்றைய உலகிலும் கூட தேசிய வாதங்கள் பேசப்பட்டு, பல உயிர்கள் பலியாக்கப்படுகின்றன. இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாகத் தங்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். சிலர் தம் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். கொமையிலிருந்து என்றாவது நாம் மீட்கப் படுவோமா என அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

தேசியவாதம் எவ்வாறு தலைவர்களை உருவாக்குகின்றது என்பதற்குச் சில நிகழ்வுகள் உவமையாகத் திகழ்கின்றன.

சூழ்நிலையின் உருவாக்கம்

இவ்வுலகில் தலைவர்கள் என்ற போற்றுதலுக்கும், பெருமைக்கும் சொந்தக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள் மக்களின் எழுச்சியாலும், புரட்சியாலும் உந்தப்பட்டவர்கள்தான்! எந்த நாடு அந்நியர்களின் கொடுங்கோன்மைக்கு உள்ளாகின்றதோ, அங்கு மக்களின் கொந்தளிப்பு அதிகமாகின்றது. மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாகும் இது போன்ற சசூழ்நிலையில் தலைவர்கள் உருவாவது இயற்கையானதே! அமெரிக்க ஏகாதிபத்தி யத்தினால் வியட்நாமில் மக்கள் தலைவராக ஹேஸி-மின் உருவானார். இதே போன்று ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து கொலம்பியா, பெரு போன்ற தென்அமெரிக்க நாடுகளை விடுவித்ததில் சைமன் பொலுசியர் என்னும் தலைவர் உருவானார். இத்தலைவர்கள் அங்குள்ள மக்களுக்குப் புனிதமானவர்களாகத் தெரிகின்றனர். ஏன், சிலர் இவர்களைத் தங்களின் வணக்கத்திற் குரியவர்களாகக் கூட ஆக்கியதுண்டு.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை மனிதப் புனிதராக முஸ்லிம்கள் பாவிப்பது இது போன்ற ஏதேனும் காரணத்தினாலா? இது உண்மையெனில், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்களின் எழுச்சியையும், உணர்வுகளையும் பயன்படுத்திக் கொண்டுதான் தலைவராக ஆனார்களா? அவர்கள் தேசியவாதம் எனும் சசூழ்நிலையின் உருவாக்கமா என்பதை எல்லாம் வரலாற்று வெளிச்சத்தில் காண்பது அவசியம்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தேசியவாதத்தை முன்வைத் துச் சசூழ்நிலையால் உருவாக்கப்பட்ட தலைவரல்லர். அவ்வாறு அவர்கள் தலைவராக வேண்டும் என எண்ணியிருந்தால் அதை அவர்கள் மிகவும் எளிதாகச் செய்திருக்க முடியும். ஏனெனில் இது போன்ற தலைவர்களை

உருவாக்குவதற்கு இன்றைய வியட்நாம் மற்றும் தென் அமெரிக்கா போன்ற அடக்குமுறைக் குள்ளான தேசங்களை விட அன்றைய அரபு நாட்டின் சசூழல்கள் மிகச்சாதகமாக இருந்தன.

அன்றையக் காலகட்டத்தில் அரபுலகின் வளமான பகுதிகள் அந்நியர்களின் ஆக்கிரமிப்பிற்குள்ளாகி இருந்தன. வடக்குப் பகுதியை ரோமர்களும், தெற்குப் பகுதியைப் பாரசீகர்களும் ஆக்கிரமித்துத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர்.

தான் ஒரு தலைவராகவோ, மன்னராகவோ வரவேண்டுமென இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் நினைத்திருந்தால் நாட்டின் இச்சசூழலைப் பயன் படுத்தி, அரபு மக்களின் ஏகோபித்த ஆதரவையும் ஒன்று திரட்டி, பதவியை எளிதாகத் தட்டிச் சென்றிருக்க முடியும். பொதுவாகச் சின்னஞ்சிறு பிரச்சினைகளுக் காகக் கூட அரபு மக்கள் பல நூறு ஆண்டுகள் யுத்தம் செய்து, 'இரத்தங் கொண்டு கரம் கழுவுவதுண்டு.' நாட்டின் பிரச்சினை தேசியப்பிரச்சினை என்பதை அவர்கள் மத்தியில் எடுத்து வைத்தால், அவர்கள் அதை ஒரு முடிவிற்குக் கொண்டுவரும் வரை ஓய மாட்டார்கள், உறங்கவும் மாட்டார்கள். ஆனாலும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அப்படி ஒரு வழிமுறையைக் கையாள வில்லை. ஏனெனில், அவர்கள் அரசராகவோ, தலைவராகவோ ஆக வேண்டும் என்று எண்ணியதில்லை. இறைவன் தன் செய்தியை மக்களிடம் சொல்லச் சொன்னான் அவர்கள் சொன்னார்கள். அதைத் தவிர அவர்கள் வேறு எதையும் எதிர்பார்த்ததில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பிற தலைவர்களைப் போன்று உருவானவர் அல்லர் என்பதையும், தம் புகழுக்காகத் நாட்டு மக்களின் உணர்வுகளையும், சசூழல்களையும் பயன் படுத்திக் கொண்டு தலைவராகவில்லை என்பதையும், மற்ற எவ்விதச் சசூழ்நிலையின் உருவாக்கமும் அல்லர் என்பதையும் மேற்கண்ட நிகழ்வு தெளிவு படுத்துகிறது.

தன்னிலைப் பாதிப்பு

பன்னாட்டுத் தலைவர்களின் வரலாற்றைப் புரட்டும் போது ஓர் உண்மை தெரியவருகிறது. சிலர் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பில் கொதித்தெழுந்து, போராட்டங்களில் புகுந்து, பின்னர் தலைவர்களாக உருவாகி இருக்கிறார்கள்.

தங்களின் பாதிப்பிற்கு இவ்வாறு இவர்கள் வடிகால் தேடியதைத் தவறு என்று சொல்ல முடியாது. உண்மையில் அது மனிதனிடம் காணப்படும் இயற்கையான ஒரு பண்பேயாகும். இவ்வாறு தன்னிலைப் பாதிப்பிற்குள்ளாகி, போராட்டக் களம் புகுந்தோரின் வரிசையில் இந்திய நாட்டின் தந்தை என்று அழைக்கப் படும் காந்திஜி அவர்களும் இடம் பெறுகிறார்கள்.

காந்திஜி அவர்கள் தம் இளமைக் காலத்தில் பாரிஸ்டர் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக இங்கிலாந்து நாட்டிற்குப் பயணமானார். அவர் சென்ற அதே கால கட்டத்தில் இந்திய மக்கள் ஆங்கிலேய அரசால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

காந்திஜி அவர்கள் தம் பட்டப்படிப்பை முடித்துவிட்டுத் தாயகம் திரும்பினார்கள். அப்போதும் ஆங்கிலேய அரசால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தன. இதற்கிடையில் காந்திஜி அவர்கள் தென் ஆஃபிரிக்காவை நோக்கி மீண்டும் தம் வெளிநாட்டுப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அங்கு ஒரு முறை டர்பனிலிருந்து பிரிட்டோரியா நோக்கி இரயிலில் பயணம் சென்றபோது, கருப்பாக இருக்கிறார் என்ற காரணத்திற்காக வழியில் ஆங்கிலேய அதிகாரி ஒருவரால் இரயிலை விட்டு வெளியில் தள்ளப்பட்டு காந்திஜி அவமானப்படுத்தப்பட்டார்.

காந்திஜி அவர்கள் இதுவரை ஆங்கிலேய அரசின் மீது நன்னம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் தம்மை அவர்கள் இவ்வாறு அவமானப்படுத்தியதும், அவருக்கு இருந்த அந்த நன்னம்பிக்கை

போய்விட்டது. இதை அவரே சத்திய சோதனை (MY EXPERIMENT WITH TRUTH) எனும் தம்முடைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"Hardly ever I have known any body to cherish such loyalty to British as I did."

"ஆங்கிலேய அரசிற்கு நான் விசுவாசமாக இருந்த அளவிற்கு எவரும் விசுவாசமாக இருந்திருக்க முடியாது."

"I thought on the whole British rule is benefical to the ruled"

"ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது பிரிட்டிஷ் ஆட்சி, ஆளப்படுவோருக்கு நன்மையானதே என நான் அந்நாட்களில் நம்பினேன்."

தென்னாஃப்ரிக்காவில் நடந்த இழிவிற்குப் பின்னர்தான் ஆங்கிலேய அரசின் மீது தாம் கொண்டிருந்த மோகத்தை விட்டு விலகியதாக, காந்திஜி அவர்கள் தம்முடைய நூலில் பல இடங்களில் குறிப்பிடுகிறார்கள்.

காந்திஜி அவர்களுக்கு ஆங்கிலேய அரசின் மீது நம்பிக்கை இருந்த அதேகாலகட்டத்தில்தான், அந்த அரசுக்கு எதிராக இந்திய தேசிய காங்கிரஸ் போன்ற தேசியவாத அமைப்புக்களும், பல தீவிரவாத அமைப்புக்களும் நாட்டின் விடுதலை வேண்டி ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தன. நாட்டின் விடுதலைக்காக பல உயிர்கள் பலியாகிக் கொண்டிருந்தன. அப்போதெல்லாம் காந்திஜி அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட வில்லை. தனிப்பட்ட முறையில் தமக்கு ஏற்பட்ட இழிவிற்குப்பின்னரே பொது வாழ்வில் ஈடுபட முன்வந்தார்கள்.

இவ்வாறு தங்கள் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட அவமானங்களின் காரணமாக ஆத்திரம் கொண்ட பலர் தலைவர்களாக உயர்ந்துள்ளார்கள் என்பது வரலாற்று உண்மை. அதற்காக அவர்களை நாம் குற்றம் சுமத்த வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக மனிதப் பண்புகள் இவ்வாறே இருக்கும்.

பிற தலைவர்களைப் போன்றே இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் தனிப்பட்ட தம்முடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பாதிப்புகளுக்காகவும், பிரச்சினைகளுக்காகவும் ஆத்திரங்கொண்டு குறிப்பிட்ட ஒரு சாராருக்கு எதிராகத் தம் பிரச்சாரத்தை மேற்கொண்டார்களா என்பதை ஆய்வு செய்யும் போது, அதற்கான பதில் கீழ்வருமாறு கிடைக்கிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள், தாம் இறைவனின் தூதர் என்று மக்கள் மத்தியில் அறிவிப்பதற்கு முன்பு அவர்களை அவர்களுடைய சமுதாயமோ, பிறசமுதாயமோ ஒருபோதும் சிறிதளவும் இழிவு படுத்தியதில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுடன் மிக கண்ணியமாகவே அனைவரும் நடந்து கொண்டனர்.

அவர்கள் தம்மை இறைத்தூதர் என்று கூறியபின்னரே தாக்குதல்களும், வசைபாடல்களும் அரங்கேறின. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள், தாம் பாதிக்கப் பட்டதால் எந்தக் கொள்கையையும் சொல்லவில்லை மாறாக, கொள்கையைச் சொன்னதால் மட்டுமே அவர்கள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளானார்கள். தலைவர்களின் உருவாக் கமும், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் உருவாக்கமும் இவ்வாறு வேறுபடுகின்றது.

இஸ்லாம் ஒழுக்க மாண்புகளை அறிவுறுத்துகிறது. ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்தல் இறைவழிபாட்டின் ஓர் அம்சம் எனப் போதிக்கும் இஸ்லாம் ஒழுக்கக் கேடுகளுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகளை வலியுறுத்தியுள்ளது.

ஆனால் சிலர் ஒழுக்கக் கேட்டில் விஞ்சியிருந்த, தம் சமுதாயத்தைச் சீர்படுத்தும் நோக்கிலே இறைத்தூதுத்துவம் எனும் கொள்கையை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அறிமுகப்படுத்திக் கொண்டார்கள், என்று கூறுவதுண்டு. மேலை மற்றும் கீழை நாட்டு அறிஞர்களில் பலரின் கருத்துக்கள் இன்று வரையிலும் இவ்வாறே இருந்துவருகின்றன. தங்கள் சுயகௌரவத்திற்காக உண்மையை அடகுவைப்போரும் இவ்வாறு கூறி மகிழ்ந்து கொள்கின்றனர். இவர்களின் கணிப்பை வரலாற்று ஒளியில் ஆய்வு செய்வதே பொருத்தமாகும்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்கா வாழ்க்கையின்போது தங்களுக்கு அளிக்கப்பட்ட இறைத்தூதை மக்களுக்கு எடுத்துரைத்தபோது பல இன்னல்களுக்கு ஆளானார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் ஒழுக்கக் கேட்டைச் சுட்டிக் காண்பித்து ஒழுக்க மேம்பாட்டைப் போதித்ததற்காக, ஒரு போதும் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படவில்லை. மாறாக 'வணக்கத்திற்குரிய உங்கள் இறைவன் ஒருவனே' என்பதை ஆணித்தரமாக மக்கள் மத்தியில் எடுத்துக்கூறிய ஒரே காரணத்திற்காக மட்டுமே கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறிவந்த இச்செய்தியை இறை மறுப்பாளர்களால் சகித்துக் கொள்ள இயலவில்லை. அப்போதெல்லாம் அவர்கள் ஒழுக்கத்தை மட்டும் மையமாகக் கொண்டு தூதுத்துவப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வில்லை. இறைவனின் செய்தியாக அவர்களிடம் என்ன வருமோ அதை அப்படியே அம்மக்கள் முன்பு கூறிவிடுவார்கள். தான் தோன்றித்தனமாக அவர்கள் எதையாவது கூறுபவர்களாக இருந்திருந்தாலோ, ஒழுக்கத்தைப் போதிப்பதற்காக இறைத் தூதுத்துவம் எனும் போர்வையைப் போர்த்திருந்தாலோ மக்கா வாழ்க்கையில் ஒழுக்கப் போதனைகளை அவசியம் போதித்திருக்க வேண்டும். ஏனெனில் இறைத்தூதர் அவர்களின் மக்கா வாழ்க்கையின் போதுதான் மக்கள் மிகவும் மோசமான ஒழுக்கக் கேட்டில் திளைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் போதனை முறை அவ்வாறு இருக்கவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மதீனா தேசம் வந்தடைந்து இஸ்லாமிய ஆட்சியை நிறுவிய பின்பு இறைவன் அவர்களுக்கு இஸ்லாமிய வாழ்க்கை முறைச்சட்டங்கள் அனைத்தையும் வழங்கினான். அவற்றை அவர்கள் மக்களுக்கு அறிவித்துத் தெளிவுபடுத்தினார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தோழர்களும் அவர்கள் சொன்ன சட்டங்களையும், ஒழுக்கப் போதனைகளையும் அப்படியே பின்பற்றி செயல்வடிவம் கொடுத்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தோழர்களுக்கு இப்பக்குவம் மதீனா தேசம் வந்த பிறகே ஏற்பட்டது என்றில்லை. மாறாக மக்காவிலும் அவர்கள் பக்குவப்பட்டே இருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்கா வாழ்க்கையைக் கடந்து, மதீனா வந்தடைந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே மது விலக்குச் சட்டம் அருளப்படுகிறது. அப்போது அவர்களின் வயது 56. அதன் பின்னர் அவர்களின் 62வது வயதில்தான் பொருளாதாரக் கொடுமையான வட்டியைத் தடைசெய்த சட்டம் வழங்கப்பட்டது.

மற்றொன்றையும் இங்கு கவனத்தில் கொள்வது அவசியம். தங்களின் தோழர்கள் மனப்பக்குவம் அடைந்த பின்னரே ஒழுக்க மேம்பாட்டுப் போதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் ஒழுக்க மேம்பாட்டுப் போதனைகளைத் தாமதப்படுத்தியிருந்தால், அவர்களின் இறுதிக் கால கட்டத்தில் இஸ்லாத்தில் இணைந்த

தோழர்களுக்கு ஏன் அவர்கள் அப்படி ஒர் அவகாசம் அளிக்கவில்லை? மதீனா வாழ்க்கையின்போது அவர்களின் தோழர்கள் இஸ்லாத்தை ஏற்ற உடனேயே அனைத்துச் சட்டங்களையும் கடைப்பிடித்தாக வேண்டிய கட்டாயத்தை ஏன் ஏற்படுத்தினார்கள்?

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை உறுதி செய்யும் வகையில் மற்றொரு முக்கிய அம்சமும் இருக்கிறது. ஒழுக்க மேம்பாட்டையே உயிர் மூச்சாகக் கொண்ட பல சீர்திருத்த மேதைகளை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தவிர ஒழுக்க மேம்பாட்டைச் செயல் வடிவம் பெறச் செய்வதில் வேறு எவரும் வரலாற்றில் சிறப்பு மிக்கவராகத் தென்படவில்லை. ஒழுக்க மேம்பாட்டைப் பற்றிப் பேசிய பலருடைய முகவரிகள் வரலாற்றில் காணப்பட்டாலும் அவர்களின் ஒழுக்கப் போதனைகள் கடைப்பிடிக்கப் படுவதில்லை. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இதற்கு நேர்மாறாகத் திகழ்வது அவர்கள் இறைத்தூதர் என்ற காரணத்தால் மட்டுமே.

இறைத்தூதர்முஹம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்து கொண்டி ருந்த அதேகாலகட்டத்தில், அவர்களின் கண் முன்னே இறைவனை மறுத்துக் கொண்டிருந்த ஆண்களும் பெண்களும் நிர்வாணமாக கஅபா எனும் இறை இல்லத்தை வலம் வந்துள்ளார்கள். ஆனால் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைச்செய்தி வரும் வரை அதுபற்றி எதுவுமே கூறவில்லை. இறைக் கட்டளை வந்தபின்னரே வழிகேடுகளைக் கண்டித்தார்கள். அதற்குப்பின்னர் 14 நூற்றாண்டுகள் ஆகியும் இஸ்லாத்தைப் பின்பற்றும் முஸ்லிம்கள் தங்களுடைய ஒழுக்க மேம்பாட்டைக் குறைத்துக் கொள்ளவில்லை. நாகரீகத்தின் உச்சத்திலிருக்கின்றோம் என்று கூப்பாடு போடும் மேலை நாடுகளின் குடும்ப அமைப்புகள்கூட இன்று சீரழிந்து காணப்படுகின்றன என்பது உலகறிந்த உண்மை. இறைத்தூதர்களின் போதனைகளைப் பின்பற்று வோருக்கும் அவற்றை அலட்சியம் செய்வோருக்கும் இடையிலான வேறுபாடு இவ்வாறே காணப்படும்.

## வரலாறுகள் காணாத வரலாறு

தலைவர்கள், மகான்கள் என்று போற்றப்படுவர்களைப் பற்றியும், இவர்களின் வாழ்வினைப்பற்றியும் கானும்போது பெரும்பாலானவர்களின் வாழ்க்கைக் குறிப்பு உண்மைக்குப் புறம்பான பல தகவல்களைக் கொண்டதாகவே இருக்கிறது. கடந்த ஓரிரு நூற்றாண்டுக் காலத்திற்குள் வாழ்ந்த தலைவர்களுள் பலர் இந்நூலில் உதாரணத்திற்காக எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர். இருப்பினும்கூட இவர்களைப் பற்றிக்கூட தெளிவானதொரு வாழ்க்கை வரலாறு எதுவும் காணப்படவில்லை.

காரணம் இந்தத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் மக்களால் அலட்சியம் செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்கள் மறைந்த பின்னர், அவர்களைப் பற்றித் துதிபாடி அவர்கள் சார்ந்திருந்த அந்த இன மக்களை மகிழ்வித்து அதன் வாயிலாகத் தங்கள் தரத்தை உயர்த்திக் கொள்ள நினைததவர்களின் கூற்றுக்களே தலைவர்களின் பெயரில் மிகுதியாய்ப் பதிவாகியுள்ளன.

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இத்தகையப் பலவீனத்திலிருந்து பாதுகாக்கப்பட்டது. அவர்களின் வாழ்க்கையைத் தான்தோன்றித்தனமாக எவரும் பதிவு செய்திட வில்லை. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை யைப் பதிவு செய்வதற்காக சுமார் 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட பலருடைய வாழ்க்கை வரலாறுகள் அலசி ஆராயப்பட்டன. இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி ஒரு செய்தி கூறப்படும்போது, அதைக் கூறும் வரிசையில்

இருப்பவர்களில் எவரேனும் ஒருவர் பொய்யர் என்றோ, இனந்தெரியாதவர் என்றோ, ஞாபக சக்தி குன்றியவர் என்றோ, அச்செய்தியை அவரிடம் சொன்னவரை அவர் கண்டதில்லை என்றோ, அவரிடம் செய்தி எட்டாத அளவிற்கு அவர் பிந்திய தலைமுறையைச் சார்ந்தவர் என்றோ, தெளிவாக அறியப்பட்டு விட்டால் அவர் மூலம் கிடைத்த அச்செய்தி ஒரு போதும் ஆதாரமாகப் பதியப்பட்டது கிடையாது. மற்ற மனிதர்களின் வரலாறுகளைப் போன்று கண்டவர் களெல்லாம் தன்னிச்சையாக, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இவ்வாறு செய்தார்கள், அவ்வாறு செய்தார்கள் என்று கூறினாலோ, எழிதினாலோ அது இஸ்லாமிய சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படாது செயல்வடிவமும் கொடுக்கப்படாது.

ஹதீஸ் எனும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பைத் தொகுத்தவர்களில் ஒருவரான இமாம் புகாரி அவர்கள், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைப் பற்றி செய்தி ஓர் ஊரிலிருக்கும் பெரியவர் ஒருவரிடம் இருப்பதை அறிந்து, நீண்ட நெடுந்தூரம் கால்நடையாகப் பயணம் செய்து அவரைக் காணச் சென்றார்கள். அந்தப் பெரியவர் ஒரு பையைக் காண்பித்துத் தம் ஒட்டகத்தை அழைத்தபோது, அந்தப்பையில் தமக்குரிய உணவிருக்கும் என நம்பி ஒட்டகம் அதன் அருகில் வந்ததும் அவர் அதைப்பிடித்துக் கட்டினார். அப்பெரியவர் அப்பையை உதறியபோது அதனுள் இரை எதுவுமே இல்லை. இக்காட்சியைத் தூரத்திலிருந்து கவனித்த இமாம் புகாரி அவர்கள், உடனே அப்பெரியவரிடமிருந்து அச்செய்தியைப் பெறாமல் திரும்பிவிட்டார்கள். ”வெற்றுப்பையை இரை உள்ளது போன்று காண்பித்து வாயில்லாப்பிராணியை ஏமாற்றும் இவர் எவரைத்தான் ஏமாற்றமாட்டார்? இவர் சொல்லை எப்படி நம்புவது என்ற காரணத்தினால் இமாம் புகாரி அவர்கள்அம்மனிதரைச் சந்திக்காமலே திரும்பிவிட்டார்கள். உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாத வேறு எவருடைய வரலாறாவது இவ்வாறு தெளிவாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கமுடியுமா? இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றைத் தொகுத்த வரலாற்று ஆசிரியர்கள் இந்த அளவிற்கு எச்சரிக்கையாகச் செயல்பட்டதற்கு முக்கிய காரணம் இறைததூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கடுமையான எச்சரிக்கைதான்.!

தம் வாழ்க்கைமுறை எவ்வித ஒளிவு மறைவுமின்றி மிகைப் படுத்தப்படாமல் உள்ளது உள்ளபடியாக உலக மக்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற உணர்வோடு இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் அவ்வப்போது பல போதனைகளைப் போதித்துள்ளார்கள்.

”எவர் என் மீது பொய்யான ஒன்றை இட்டுக்கட்டுகிறாரோ அவர், தன் இருப்பிடத்தை நரகமாக ஆக்கிக் கொள்ளட்டும்.“ என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். நூல்: புகாரி

”மர்யமின் மகன் ஈசா(அலை) அவர்களைக் கிறிஸ்தவர்கள் மிகைப்படுத்திப் புகழ்ந்ததைப் போன்று என்னை நீங்கள் மிகைப்படுத்திப் புகழாதீர்கள் நான் ஓர் அடியானே! (என்னை) இறைவனின் அடியான் என்றும் அவனுடைய தூதர் என்றும் கூறுங்கள்“ என்று இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: புகாரி)

”என்னிடமிருந்து வந்துள்ள ஒரு வசனமேனும் சரி அதை அனைவருக்கும் எட்டச் செய்யுங்கள்“ (நூல்: புகாரி)

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இவ்வாறான போதனைகளுக்குட்பட்டு, அவர்களின் வரலாறு தொகுக்கப் பட்டுள்ளது. இதனால்தான் இவர்களின் வரலாறு உண்மையில் அனைவருடைய வரலாறுகளையும் விடச்சிறந்ததாகவும், முற்றிலும் மாறுபட்டதாகவும், சரியானதாகவும், துல்லியமானதாகவும் காணப்படுகிறது.

சில தலைவர்களும், அரசர்களும் தங்களைப் பற்றிய புகழாரங்களை மிகைப்படுத்திக் கூறச் செய்து தாங்களே அவற்றைத் தொகுத்துள்ள வரலாறுகளும் உண்டு. தங்களின் வரலாற்றைத் தாங்களே எழுதும் (Autobiography) நபர்கள் சுவைக்காகச் சிலவற்றை மிகைப்படுத்துவதில் நிர்பந்திக்கப்படுகிறார்கள். ஆனால் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வரலாறு இவ்வாறான அனைத்துக் குறைகளையும் விட்டு நீக்கப்பட்டதாக உள்ளது. எனவேதான் பெரும் வரலாற்று ஆசிரியர்களும் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வரலாறு வெளிச்சத்தைப் போன்று வெளிப்படையானது. இதுபோன்றதொரு வரலாறு எந்த மனிதருக்கும் இருந்ததில்லை, அதில் எவரும் இருளைக் காணமாட்டார் என்று குறிப்பிட வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானார்கள்.

## இறுதித்தூதர் அரபகத்தில் ஏன்?

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித்தூதர்! அவர்கள் அரபகத்தில் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் மூலம் இஸ்லாம் மீண்டும் நினைவூட்டப்பட்டு, அகிலமெங்கும் வேர்விட்டு மனித குலத்திற்குச் சீரியவழியில் நடத்திக் கொண்டிருக்கிறது என்பது முஸ்லிம்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

இறுதியான அந்தத் தூதர் ஏன் அரபகத்திற்கு அனுப்பப்பட வேண்டும், மற்ற இடங்களில் அனுப்பப்பட்டிருக்கலாம்தானே என்பது முஸ்லிம் அல்லாத சிலருடைய ஐயம்.

இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டிருந்தால், ஏன் அவர் இந்தியாவுக்கு அனுப்பப் பட்டார். என்ற கேள்வி எழும். அவர் ரஷியாவுக்கு அனுப்பப் பட்டிருந்தால் அவர் ஏன் ரஷியாவுக்கு அனுப்பப்பட்டார்கள் என்ற மற்றொரு கேள்வி எழும். இறுதித் தூதரை இறைவன் எங்காவது ஓர் இடத்துக்கு அனுப்பித்தான் ஆக வேண்டும். இறைத்தூதர் எங்கு அனுப்பப்பட்டிருந்தாலும் இவ்வாறு எதையாவது கேட்க முடியும். பலர் இவ்வாறான கேள்வியைத் தொடுத்துக் கொண்டு தான் இருப்பர். இருப்பினுங்கூட இறைவனின் இறுதித்தூதர் அரபகத்துக்கு ஏன் அனுப்பப்பட்டார் என்பது இன்னும் சற்று தெளிவாக ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றே.

அன்றையக் காலச் சசூழலில் அரபு மக்கள் மத்தியில் ஏராளமான தீமைகள் காணப்பட்டன. எனவே அவர்களை முதலில் சீர்செய்து, உலகிற்கு வழிகாட்டிகளாய்த் திகழச் செய்யலாம் என்பதற்காக இறைவன் தன் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அரபகத்துக்கு அனுப்பியிருக்கின்றான் என்பது போன்ற சில காரணங்கள் சொல்லப்படு வதுண்டு. உண்மை அதுவாக இருக்கமுடியாது. ஏனெனில் அரபு மக்கள் சீர்கெட்ட கலாச்சாரத் தில் வாழ்ந்த அதே காலகட்டத்தில் அந்த அரபு மக்களையும்விட இழிவான செயல்களையும் தீமைகளையும் அதிகமாகப் புரியும் சமுதாயம் பிற நாடுகளிலும் வாழ்ந்தது என்பதை வரலாறுகள் தெளிவாகக் கூறிக் கொண்டுள்ளன. ஏன் இந்திய மண்ணில்கூட அது மாதிரியான சீர்கெட்ட கலாச்சாரங்கள் இருந்தன. கணவன் இறந்துவிட்டால் அவன் எரியும் அதே சிதையில் மனைவியும் உடன்கட்டை ஏற வேண்டும் என்பது கட்டாயச் சட்டமாக இருந்தது. உறவினர்கள், ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவள் நெருப்பில் விழுந்து துடிதுடித்து மாய்வதைப் பார்த்து, அதைப் புண்ணியம் என எண்ணி மகிழ்ந்து வந்தனர். இராஜஸ்தான் போன்ற இடங்களில் இன்றும் இக்கொடுமைகள் காணப்படுகின்றன.

இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முன்பு பல காலகட்டங்களில் இறைத்தூதர்கள் பலர் பல்வேறு மொழியினருக்கும், பல்வேறு நாட்டவர்களுக்கும் அனுப்பப்

பட்டிருந்தர்கள். ஆனால் அவர்கள் அந்த இறைத்தூதர்களைப் பொய்ப்பித்தும், அவர்கள் கொண்டுவந்த வேதங்களைப் புறக் கணித்தும், புனைந்தும் சேதப்படுத்தினர். எல்லா நாட்டினருக்கும் எல்லா மொழியினருக்கும் வழி காட்டியாக அமைந்து, பல்வேறு கொள்கைகளைக் கடைப்பிடித்துச் சிந்தனைத் தடுமாற்றத்தில் இருக்கும் மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்தியாக வேண்டும். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட இறைவேதமும் இவ்வாறே கூறிக்கொண்டிருக்கிறது.

”இது (திருக்குர்ஆன்) உலக மக்கள் அனைவருக்கும் நல்லுபதேசமே அன்றி வேறில்லை.“ (அல்குர்ஆன் 68:52)

சமயச்சார்புடையவர்களும் சமயச்சார்பு அற்றவர்களுமாகிய உலக மக்களை பொதுவாக ஏழு அணியினராய்ப் பிரித்துப் பார்க்கலாம்.

1. யூதக் கொள்கை அணியினர்.

2. கிருஸ்துவக் கொள்கை அணியினர்.

3. நெருப்பை வணங்கும் அணியினர்.

4. சூரியன், சந்திரன் போன்ற இயற்கையை வணங்கும் அணியினர்.

5. சிலைகளையும், மனிதர்களையும், அதாவது படைப்பினங்களை வணங்கும் அணியினர்.

6. படைத்த ஓர் இறைவனை மட்டுமே வணங்கும் அணியினர்.

7. இறைவனே இல்லை என்று மறுக்கும் அணியினர்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைவனின் தூதராக அனுப்பப்பட்ட அன்றையக் காலகட்டத்தில் மேற்குறிப்பிட்ட ஏழு அணியினரும் மொத்தமாக வாழ்ந்த ஒரே இடம் அரபகம் மட்டுமே. எனவே இந்த ஏழுவகை மக்களின் சிந்தனைத் தடுமாற்றத்திற்கும் சரியான முறையில் விளக்கமளித்துத் தெளிவு படுத்தினாலே, இஸ்லாமிய மார்க்கம் உலகெங்கும் பரந்து செல்வதற்கும், மக்கள் அதை ஏற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பாக இருக்க முடியும் என்ற அடிப்படையில் இறைவன் தன் இறுதித்தூதரை அரபகத்திற்கு அனுப்பி இருக்கலாம். மற்ற தேசங்களுக்கு இறுதித்தூதர் அனுப்பப்பட்டிருந்தால் பிரச்சினைகள் அனைத்தும் தீர்வைக் கண்டிருக்கும் என்று உறுதிபடக் கூற முடியாது.

உதாரணமாக, இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தால் இயற்கையையும், சிலைகளையும், மனிதர்களையும், மற்ற படைப்பினங்களையும் வணங்கிக் கொண்டிருக்கும் அணியினருக்கு மட்டுமே விளக்கம் அளித்திருக்க முடியுமே தவிர, அனைத்துக் கொள்கையுடைய மக்களுக்கும் தெளிவான விளக்கம் அளித்திருக்க முடியாது. ஏனெனில், இந்திய மக்கள் அந்த ஆறாம் நூற்றாண்டில் யூதர்களைப் பற்றித் துளியளவும் அறிந்திருக்கவில்லை. எனவே, படைத்தவனை விட்டுவிட்டு, படைப்பினங்களை வணங்கக் கூடிய இந்திய மக்களின் சிந்தனைத் தடுமாற்றத்திற்கு மட்டுமே விளக்கம் அளித்திருக்க முடியும். உலகின் மற்ற இடங்களில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களைப்பற்றிய விளக்கம் எதுவும் கூறியிருக்க முடியாது. அப்படியே விளக்கம் கூறியிருந்தாலும் யூதர்களைப் பற்றி ஒன்றுமே புரியாத மக்களுக்குப் பெரும் குழப்பம்தான் ஏற்படுமே தவிர, தெளிவு ஏற்படாது. அது மட்டுமல்லாது இன்று கணிசமாக வாழும் யூதர்களுக்கு இறைச் செய்திகளும் எட்டி இருக்காது.

அவ்வாறே அந்த 6-ம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவுக்கு இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அனுப்பப்பட்டிருந்தால் அங்குள்ள மக்களின் மூடப் பழக்கங்கள் மட்டுமே திருத்தத்திற்கு உள்ளாகி

இருக்கும். கிருஸ்தவர்களின் வாடையைக்கூட அறியாத வர்களாக இருந்த அவர்களிடம் கிருஸ்துவக் கொள்கைகளையும், அது பற்றிய விளக்கங்களையும் கூறி இறைச் செய்தியைத் தெளிவு படுத்தியிருந்தால், அவர்களுக்கு எவ்விதப் பயனும் இல்லாது போயிருக்கும் அல்லது அப்படியே கிருஸ்தவர்களைப் பற்றி எதுவுமே கூறாது விட்டிருந்தால், இன்றைய உலகில் பெருமளவு வாழும் கிருஸ்தவர்களுக்கு இறைச் செய்தி கிடைக்காமலே போயிருக்கும்.

இறைச் செய்தி அகிலத்தார் அனைவருக்கும் பொதுவான ஒன்று. குறிப்பிட்ட கொள்கை, மொழி, இனம், தேசம் என்ற அடிப்படையில் எவரும் அதைத் தனக்கு மட்டும் சொந்தமானதாக ஆக்கிக்கொள்ள முடியாது. எனவேதான் அனைத்துச் சிந்தனை யுடைய மக்களும் ஒட்டுமொத்தமாக வாழ்ந்த அந்த அரபு நாட்டில் இறைவன் தன் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அனுப்பி யுள்ளான் என்ற முடிவிற்கு வருவதே பொருத்தமாகிறது.

## அவரென்ன தத்துவ ஞானியா?

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தத்துவ ஞானிகளின் தத்துவங்கள் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. ஆம்! அவற்றைப் பேசும்போது உண்மையில் வியப்பாகத்தான் இருக்கிறது. சாக்ரட்டீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோர் தத்துவ மேதைகள் என பெரும் பெயர் பெற்றவர்கள். பிளாட்டோவால் எழுதப்பட்ட 'அரசியல் சான்றோர்' மற்றும் 'குடியரசு' ஆகிய நூல்கள் பிரபலமானவை. இவற்றில் சமூகச் சித்தாந்தங்களும், அரசியல் தந்திரங்களும் காணப்படுகின்றன.

பொதுவாகத் தத்துவ ஞானிகள் பலர், தாங்கள் வாழ்ந்த காலத்தில் மொழிப்புலமை மிக்கவர்களாகவும், தர்க்கவாதிகளாகவும் திகழ்ந்துள்ளார்கள். இவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தபோது சமூகத்திற்கு எதிரான கொடுமைகளைக் கண்டு அதற்குத் தீர்வு கூறினார்கள் என்று உறுதிபடக் கூறமுடியாது. கொடுமைகள் மலிந்திருந்தபோது பாராமுகமாக இருந்து கொண்டு எவ்வாறு சமூகக் கடமையாற்றினார்கள் என்பதே தற்போது பெரும் கேள்விக் குறியாக உள்ளது.

சில தத்துவ மேதைகள் அரசர்களுக்கும், ஆதிக்க வர்க்கத் தினருக்கும் அஞ்சியவர்களாக, ஆதிக்க வர்க்கத்தினர் மேலும் பல அநியாயங்கள் புரிவதற்கு ஏதுவாகத் தங்கள் தத்துவங்களை உதிர்த்துள்ளனர். மக்களை இரண்டாகக் கூறுபோட்டு, மேல் வர்க்கம் மற்றும் கீழ் வர்க்கம் என்னும் பிரிவினைகளைச் சட்டமாக்கினர். இந்த வரிசையில் பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்கள் இடம் பெறுகின்றனர்.

பிளாட்டோ தன் 'குடியரசு' எனும் நூலில் அடிமைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

"அடிமைகள் இருந்தால்தான் அவர்கள் மீதும் கடும் உடல் உழைப்புப் பணிகள் சுமத்தப்பட்டு, ஆள்வோர் பிற பணிகளில் ஈடுபட முடியும். எனவே அடிமை முறை அரசியல் ஒன்றிய ஒரு பண்பாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அரிஸ்டாட்டில் தன் 'அரசியல்' எனும் நூலில் அடிமைகளைப்பற்றிக் குறிப்பிடுகையில்,

"வீட்டை நிர்வகிக்க உதவும் பல சாதனங்கள், கருவிகளைப் போன்று, உயிருள்ள அடிமையும் ஒரு சாதனமாக அல்லது கருவியாக பயன்படுகிறான்." என்று கூறியுள்ளார்.

இதே தத்துவ ஞானிகள் வாழ்ந்த காலத்தில்தான் இவர்களின் நாட்டில் அடிமைகளை நிர்வாணமாகச் சிங்கத்துடன் மோதவிட்டு, அவன் கிழித்துக் கொல்லப் படுவதைப் பார்த்து ஆதிக்கவர்க்கத்தினர்

ரசித்து வந்தனர். அப்போது இந்தத் தத்துவ ஞானிகள் அக் கொடுமைகளுக்கு எதிராக வாயைக்கூடத் திறக்கவில்லை என்பதும் கிரேக்க வரலாறு.

இந்த தத்துவ ஞானிகளைப்போன்று இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் ஒரு தத்துவ ஞானி போலும் என்று எண்ணுவோர் பலருண்டு. பல எழுத்தாளர்கள் இவ்வாறு சித்தரித்தும் இருக்கின்றனர்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள், பிற தத்துவ ஞானிகளைப் போன்று மனித இனத்திற்கு எதிரான அல்லது செயல்வடிவம் பெறாத தத்துவங்களை உதிர்க்கவில்லை. இறைவன் புறத்திலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை மட்டுமே உலக மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். அவர்கள் தாமாகத் தத்துவங்களை உதிர்த்து தத்துவஞானி என்ற போற்றுதலுக்கு உள்ளாகவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் சமூகத்திற்கு எதிரான பல கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இருந்தாலும் அவர்கள் இறைத்தூதர் என்பதால் அது சம்பந்தமாக இறைவனின் கட்டளைகள் வரும் வரை தாமாக எவ்விதக் கட்டளையும் இடவில்லை, எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இறைவனிடமிருந்து செய்தி வந்தபின்னரே சமூகத்திற்கு எதிரான கொடுமைகளைக் கடுமையாக எதிர்த்தார்கள். இறைவனின் தயவைத் தவிர்த்து வேறு எவருடைய தயவையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவ்வாறே இறைக் கட்டளைகளைச் செயல்வடிவம் பெறச் செய்வதில் எப்போதும் தாமதமோ, தயக்கமோ காட்டியதில்லை. இதைச் சொன்னாலோ, செய்தாலோ எதிர்ப்புகள் வலுப்படுமே என அஞ்சியதில்லை, யோசித்ததில்லை. ஆதிக்க வர்க்கத்தினரை அண்டி வாழும் தத்துவ ஞானிகளுக்கும் இறைத்தூதருக்கும் உள்ள வேறுபாடு இவ்வாறுதான் காணப்படுகிறது.

அன்றைய அரபு மக்களின் கொடுமைகளுக்கு உள்ளாக்கப் பட்டு இருந்தோர் வரிசையில் அடிமைகளும் அடங்குவர். கிரேக்க தத்துவஞானிகளைப் போன்று தத்துவங்களைப் பேசிக்கொண்டு கொடுமைகளுக்கு ஆதரவளித்தாற் போன்று, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மௌனம் காத்திடவில்லை. அடிமைகளை நிரந்தரமாக விடுவிப்பதற்கு இறைவன் காட்டிய வழியைச் செயல்வடிவம் பெறச் செய்வதில் மிகத்தீவிரமாக இருந்தார்கள்.

”இறைநம்பிக்கையாளன் ஒருவன் மற்றோர் இறைநம்பிக்கை யாளனைக் கொலை செய்வது ஆகுமானதன்று. மாறாக, தவறுதலாக அவ்வாறு கொலை செய்துவிட்டால் இறைநம்பிக்கை யுள்ள ஓர் அடிமையை விடுதலை செய்தல் வேண்டும்.“ (அல்குர்ஆன் 4:92)

”ஒருவர் தன் மனைவியுடன் உறவு கொள்ளக் கூடாது என்பதற் காக அவளைத் தன் தாய்க்குச் சமம் என்று கூறி அதன் பின்னர், மீண்டும் அவளுடன் தாம்பத்ய உறவுகொள்ள நாடினால், வசதி இருக்கும் பட்சத்தில் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும்.“ (அல்குர்ஆன் 58:3)

”அடிமைகளை விடுதலை செய்வதற்காக ‘ஜகாத்‘எனும் முஸ்லிம்களின் பொதுநிதியைப் பயன்படுத்தலாம்.“ (அல்குர்ஆன் 9:60)

”ஈடுபெற்று அல்லது உபகாரமாக அடிமையை விடுதலை செய்யலாம்.“ (அல்குர்ஆன் 24:33)

”ஓர் அடிமையை விடுவித்தல் தன்னை நரகத்தை விட்டுக் காப்பதாகும்.“ (அல்குர்ஆன் 90:10,13)

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களே பல அடிமைகளை விடுவித்து ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இக்கொள்கைத் தாக்கத்தினால் அவர்களின் துணைவியார் ஆயிஷா(ரலி) அவர்களும். தோழர்கள் அபூபக்கர்(ரலி), அப்பாஸ்(ரலி), அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி), அப்துர் ரஹ்மான்(ரலி) முதலியோரும் அடிமைகளை விலைக்கு வாங்கி விடுதலை

செய்ததுள்ளனர். இது வரலாற்று ஏடுகளில் என்றென்றும் நிலைத்து நிற்கும் சான்றாகும். இதன் தொடர்ச்சியாகத்தான் இன்று முஸ்லிம்களிடத்தில் அடிமைகளே இல்லை என்ற நிலையை இஸ்லாம் உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தம் ஆட்சிக் காலத்தில் 70 ஆயிரம் கருப்பு நிற அடிமைகளை விடுதலை செய்து உலக மக்களை வியப்பில் ஆழ்த்தினார். ஆபிரகாம் லிங்கன் அவர்களின் இச்சேவை பெரிதும் போற்றுதலுக் குரியதே. ஆனால் அவர் அதைச் சட்டமாக்கி அடிமைச் சின்னத்தை நிரந்தரமாக ஒழிப்பதற்கு வகை செய்திருந்தால், மனித குலம் மேம்படுவதற்கு அது ஒரு காரணமாக இருந்திருக்கும்.

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அடிமைகளை விடுவிப்பதற்கான நிரந்தரத் தீர்வை மேற்கொண்டார்கள். எனவேதான் இன்று இஸ்லாமியர்கள் மத்தியில் அடிமைச் சின்னமே அழிந்து போயுள்ளது.

தத்துவ ஞானிகளில் பலர் பல விஷயங்களைப் பற்றி வாயே திறக்கவில்லை என்பது ஒரு பக்கமிருக்கட்டும். அவர்கள் போதித்த தையாவது சாதித்தார்களா என்பது அறியப்பட வேண்டிய ஒன்று.

தத்துவஞானிகளில் பலருடைய தத்துவங்கள் அவர்களின் வாழ்க்கையில் கூடச் செயல்வடிவம் பெறாமல் போயிருக்கின்றன.

ஆங்கிலேய தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன் மற்றும் தென்னிந்தியத் தத்துவஞானி திருவள்ளுவர் போன்றோரை இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் பல தத்துவங்களை அளித்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அதற்குச் செயல்வடிவம் கொடுத்ததாக வரலாற்றில் நிரூபணமாகவில்லை.

திருவள்ளுவர் தன் 553-வது குறளில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

”நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன் நாள்தொறும் நாடு கெடும்.“

ஓர் அரசன் தன் ஆட்சிக் காலத்தில் தன் நாட்டில் நிகழும் தீமைகளைப் பற்றி ஆய்வு செய்து அதற்கொரு தீர்வைக் காணவில்லை எனில், அவனுடைய ஆட்சியும் நாடும் கெட்டு விடும் என்ற திருவள்ளுவரின் உபதேசம் சிறந்ததென்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது. ஆனால் அவர் அதற்குச் செயல்வடிவம் கொடுத்தாரா, அதற்கான வாய்ப்பே அவருக்குக் கிடைத்ததில்லையா என்பது பெரும் கேள்விக்குறி. அப்படியே அவருக்கு வாய்ப்புக்கிடைத்திருந்தால் அதற்கு அவர் எந்த அளவு செயல்வடிவம் கொடுத்திருப்பார் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது. சுருங்கச் சொல்வதானால் ”திருவள்ளுவர் ஒரு வார்த்தைச் சித்தரே தவிர, வாழ்க்கைச் சித்தரல்ல!“

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் வாழ்க்கையில் சாதித்ததையே போதித்தார்கள். போதித்த அனைத்தையும் சாதித்து காட்டினார்கள். அவர்கள் மனித இனத்திற்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள்.

”இறைநம்பிக்கையாளர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள். நீங்கள் செய்யாததை கூறுவது இறைவனிடம் பெரும் வெறுப்புடையதாகும்.“ (அல்குர்ஆன் 61:2,3)

மேற்கண்ட இறைவனின் கட்டளை இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் உள்ளிட்ட இறைநம்பிக்கையாளர் அனைவருக்கும் உரியதாகும்.

திருக்குறள் போன்ற மறைகள் மூலம் ஒரு சீரிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று சிலர் வாதிடலாம். முடியுமா, முடியாதா என்பது முக்கியமன்று. திருக்குறள் அறிவுரைப்படி வாழ்ந்த ஒரு சமுதாயத்தை வரலாற்றில் அவர்களால் காண்பிக்க முடியாது என்பதுதான் இங்கு கவனிக்கத் தக்கது.

தத்துவஞானிகளால் பேசப்பட்டுள்ள சித்தாந்தங்களும், அறிவுரைகளும் வரலாற்றில் செயல் வடிவம் பெற்றிருந்தால் மட்டுமே அவை அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைமுறை எனக் கருதப்படும். செயல் வடிவம் பெறாத சித்தாந்தங்கள் மனித வாழ்க்கையில் அங்கீகாரம் பெறும் என்று உறுதி படக்கூறமுடியாது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைவனிடமிருந்து கொண்டுவந்துள்ள திருக்குர்ஆன் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் ஒரு சீரிய சமுதாயத்தை உருவாக்கியது. அச்சமுதாயம் உலகிற்கே வழிகாட்டியாகத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது. அதற்கு முழுமையான மற்றும் முதன்மையான காரணமாக திருக்குர்ஆன் திகழ்ந்துள்ளது. இது யாரும் மறுக்க முடியாத வரலாற்று உண்மை.

அன்று வாழ்ந்த அந்த முஸ்லிம் சமுதாயத்தைப் போன்று இன்றைய முஸ்லிம் சமுதாயத்தின் வாழ்க்கை நிலை ஏன் இல்லை என்ற கேள்வி எழலாம். இஸ்லாத்தின் பெயரால் அனாச்சாரங்கள் அரங்கேறும்போது இது மாதிரியான கேள்விகளுக்கு விடையளிப்பது கடமைதான்.

ஓர் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் என்ற பெயரிலிருக்கும் வேடதாரிகளும், இஸ்லாத்தைப் பற்றியே அறியாத பாமர முஸ்லிம்களுமே இவ்வாறுள்ளனர். உண்மையி லேயே இஸ்லாத்தை அதன் தூயவடிவில் பின்பற்றும் முஸ்லிம் களிடம் இன்றும் சீரிய பண்புகள் அனைத்தும் காணப்படுகின்றன.

மனித வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்குக் திருக்குர்ஆன் முழுமையான தீர்வைத் தராது என்று வாதிடுவோர், அதைவிடச் சிறந்த ஒன்றைத் தயாரான நிலையில் வைத்துக் கொண்டு அதன் பின்னரே வாதிட வேண்டுமே தவிர, (அதற்கான சாத்தியமே இல்லை) அர்த்தமற்ற முறையில் வாதிடுவது நியாயமாகாது.

உயிரோட்டமுள்ள ஒரு கொள்கையைக் கொண்டு வந்துள்ள இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கும் தத்துவஞானிகளுக்கு முள்ள வேறுபாடு இவ்வாறுதான் அமைந்திருக்கிறது.

## சிந்தனைப் புரட்சி

மதம் விஞ்ஞானத்தின் எதிரி, மனிதர்களை மயக்கும் அபின் போன்றதே மதம்! என்ற ஒரு கருத்தோட்டம் பலருடைய இதயங்களில் குடிகொண்டுள்ளது.

இந்த ஐரோப்பியச் சிந்தனையாளர்களும், அவர்களின் சிந்தனையைக் கடனாகப் பெற்றுக்கொண்ட பிற நாட்டு அறிஞர்களில் சிலரும் மதங்களை விமர்சிக்கத் தவறவில்லை. இவர்களின் கணிப்பு பெருமளவு உண்மையும்கூட! ஏனெனில், ஐரோப்பியர்கள் வாழ்ந்த அந்தப் பகுதியில் தான் அங்குள்ள விஞ்ஞானிகளின் அரிய கண்டுபிடிப்புகள் அங்கேயே மதவாதிகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டன. அந்த மதவாதிகள் விஞ்ஞான உண்மைகளை எதிர்த்ததற்குக் காரணமுண்டு. பல ஆண்டுகளாய் உண்மை என நம்பிவந்த தங்களின் மதக் கோட்பாடு களுக்கு எதிராகவே அந்த விஞ்ஞான உண்மைகள் அமையப் பெற்றிருந்தன. அந்த மதவாதிகளின் கடின அச்சுறுத்தலால் விஞ்ஞானிகள் பலர் தங்களின் கருத்துக்களையும், கண்டுபிடிப்புக் களையும் வெளிக் கொண்டு வராமலேயே மடிந்து போனதுண்டு.

பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்ற உண்மையை கிருஸ்துவத் திருச்சபைக்கு எடுத்துரைக்கப் பயந்து மறைமுகமாகச் சிலரிடம் மட்டுமே தம் கருத்துக்களைச் சொன்ன 'கோபர்நிகஸ்' போன்ற விஞ்ஞானிகளின் சம்பவமும் பூமி தட்டையானதல்ல, உருண்டை யானது என்ற உண்மையைச் சொன்னதற்காகச் சிறையில் அடைக்கப்பட்ட 'கலீலியோ' போன்ற விஞ்ஞானிகளின் சம்பவமும் வரலாற்றில் மதவாதிகளும், விஞ்ஞானிகளும் மாறுபட்டு இருந்த உண்மையை விளக்குகின்றன.

மதம் என்ற முட்டுக்கட்டையைத் தகர்த்தெறிந்த பின்னரே ஐரோப்பா விஞ்ஞானத்தில் வீறு நடை போட்டது. ஆனால் ஐரோப்பாவில் இந்த விஞ்ஞான மேன்மைக்கு வித்திட்டதே இஸ்லாம்தான். விஞ்ஞான உண்மைக்கு நேர்மாறாக உள்ள பிற மதங்களைப் போன்று இஸ்லாமிய மார்க்கம் இல்லை. இன்றளவும் விஞ்ஞானத்தின் பெரும் துறைகள் அரபி வார்த்தையில் அமைந்திருப்பதன் காரணமும் இதுதான்.

இதற்கொரு சிறிய உதாரணமாக, The Random House dictionary of the English language compiled by:- Lawrance Urdang ல் காணப்படும் Algebra (அல்ஜிப்ரா), Al Chemy, Chemistry (அல்கெமி), Alcohol (ஆல்கஹால்), Alkali (அல்கலி), Algorithm (அல்காரிதம்) போன்ற சில விஞ்ஞானப் பெயர்களைக் குறிப்பிடலாம். சுருக்கமாகக் கூறினால் "Marguis" என்னும் அறிஞர் தம் 'Speeches delivered in India" என்னும் நூலில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

"It is to musalman science, to musalman art and to musalman literature that Europe has been in a great means indebted for its extrication from darkness of the middle ages."

"ஐரோப்பா இடைக்காலத்தில் அறியாமை எனும் இருளை விட்டு வெளிவரக்காரணமாக இருந்ததற்கு முஸ்லிம்களின் கலை, முஸ்லிம்களின் விஞ்ஞானம், முஸ்லிம்களின் இலக்கியம் ஆகியவற்றிற்கு அது (ஐரோப்பா) பெருமளவில் நன்றிக்கடன் பட்டிருக்கிறது."

இதிலும் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், ஐரோப்பிய நடைமுறைக்கு நேர்மாறாகச் செயல்பட்ட அதே கி.பி. 6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 14ம் நூற்றாண்டு வரையில் விஞ்ஞானத்தின் தூண்டுகோலாகத் திகழ்ந்தது இஸ்லாமிய நாகரீகமேயாகும்.

அறிவுப்பூர்வமாக சிந்திப்பது மதநம்பிக்கைகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற காரணத்தால் மதவாதிகள் மக்களின் அறிவுக்குத் திரையிட்டிருக்கிறார்கள். ஆனால், இஸ்லாம் சிந்தனைக்கு முக்கியத்துவம் அளித்த காரணத்தால் அன்றைய அரபிமக்கள் பலர், பல விஞ்ஞானச் சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

சீன, கிரேக்க நாகரீகங்கள் விஞ்ஞான மேன்மைக்குத் தங்களின் பங்கை அளித்தது போன்று, இஸ்லாமிய நாகரீகமும் தன் பங்கை அளித்துள்ளது போலும், என்று இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில், சீன, கிரேக்க நாகரீகங்களின் வளர்ச்சிக்குப் பின்னால் ஒரு தனிமனிதனின் தாக்கமோ, கொள்கையோ காரணமாக இருந்தது என்று சொல்வதற்கில்லை! இந்நாகரீகங்கள் படிப்படியாக முன்னேறின. பலருடைய உழைப்பையும் பெற்ற பின்பே ஓரளவு வெற்றியடைந்தன.

அன்றைய அரேபியர்கள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இப்பூமியில் வாழ்ந்த சமுதாயமானாலும் கி.பி. 6ம் நூற்றாண்டிற்குப் பின்னரே அவர்கள் பிற மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் முன்னேற்றத்தை அடைந் தார்கள். அந்த ஆறாம் நூற்றாண்டில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தங்களின் இறைத் தூதுத்துவத்தைப் பரப்பிய பின்னரே இத்தகைய விஞ்ஞானச் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் பிறப்பிற்கு முன் அரபுச் சமுதாயம் எந்த

ஒரு போற்றுதலுக்குரிய செயலுக்காகவும் பேசப்பட்டதே கிடையாது. எனவே ஒரு தனிமனிதரின் தாக்கமே அன்றைய அரபு முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்டது என்பது தெளிவாகிறது. அந்த இறைத்தூதர் எனும் தனிமனிதரின் பிறப்பு அரபுலகின் இயற்கைச் சசூழலில் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்தியதா? என்றால் அதுவு மில்லை. சீன, கிரேக்க நாடுகள் இயற்கை வளத்தைப் பெற்றிருப்பது போன்று அரபுலகம், இறைத்தூதரின் பிறப்பிற்கு முன்பும் அவர் காலத்திலும் பெற்றிருக்கவில்லை. அன்றைய அரபு மக்களின் சொத்து பாலைவனமும், மணற்குன்றுகளுமாகவே இருந்தது.

அவர்கள் ’அரேபியர்கள்‘ என்ற இன உணர்வினால் தூண்டப் பட்டு பின்பு வளர்ச்சியடைந்தார்களா என்றால் திட்டவட்டமாக அதுவும் இல்லை என்றே கூற முடிகிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை, மொழி மற்றும் இன உணர்வு ஆகியவற்றிற்கு அப்பாற் பட்டதாகவே காணப்படுகிறது. அனைவரும் இறைவனின் அடிமைகள் என்பதை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்கள் மனதில் ஆழமாகப் பதியச் செய்துள்ளார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைவனிடமிருந்து பெற்றுத் தந்த இஸ்லாமிய மார்க்கமே அரபு மக்களின் இத்தகைய சாதனைகளுக்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தியது.

சிந்திப்பது பாவம் என்று மதவாதிகள் தங்களின் கருத்தைக் காலம் காலமாகப் பரப்பிவந்தனர். ஆனால் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அக்கருத்தை ஒருபோதும் ஆதரித்ததுகிடையாது. மக்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும் என்று கட்டளை யிட்டார்கள். திருக்குர்ஆனும் சிந்திப்பதைத் தூண்டுகிறது.

”ஒட்டகம் அது எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்றும், வானம்! அது எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறது என்றும், மலைகள் அவை எவ்வாறு நடப்பட்டுள்ளன என்றும், பூமி அது எவ்வாறு விரிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர்கள் கவனிக்க வேண்டாமா?“ அல்குர்ஆன்: 88:17-20

விலங்கியல் (Zoology), புவியியல் (Geography), வானவியல் (Astronomy) ஆகியவற்றைப் பற்றிச் சிந்திக்குமாறு திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது. மேற்கண்ட வசனங்கள் மட்டுமல்ல இன்னும் ஏராளமான வசனங்கள் மனிதனைச் சிந்திக்கத் தூண்டிக் கொண்டிருப் பதைத் திருக்குர்ஆனின் பல இடங்களில் காணலாம். அனைத்துத் துறைகளிலும் இறைநம்பிக்கையாளர்கள் தங்கள் சிந்தனையைச் செலுத்தவேண்டும் என்பதை இஸ்லாம் கடமையாக்கியுள்ளது.

ஒட்டகம் அது எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது என்பதைச் சிந்திக்க வேண்டாமா என்ற இறைவனின் கேள்வி, ஒட்டகத்தின் வெளித் தோற்றத்தையே குறிக்கிறது என இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. ஒட்டகம் படைக்கப்பட்டுள்ள அதிச யத்தையும், அதன் உள் உறுப்புக்களைப் பற்றிய ஆய்வுகளையும் மேற்கொள்ளத் திருக்குர்ஆன் அடியெடுத்துக் கொடுக்கிறது.

அது மட்டுமல்லாமல் இங்கு ஒட்டகம் என்று குறிப்பிடப் பட்டுள்ளதால், அதை மட்டுமே ஆய்வு செய்ய வேண்டும் என்பதில்லை. மாறாக, விலங்கியலை (Zoology) உள்ளடக்கிய அனைத்துக் கால் நடைகளையும் ஆய்விற்குட்படுத்த வேண்டும் என்றும் அது பொருள் தருகிறது. அன்றைய அரபு மக்கள் மத்தியில் அதிகம் பரிச்சயமான கால்நடையாக ஒட்டகம் இருந்த காரணத்தால்தான் இறைவன் இதனை உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளான்.

இவ்வாறே இறைவன் வானங்கள் மற்றும் பூமியைப் பற்றிய ஆய்வினையும் மேற் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளான்.

”உங்களுக்குள்ளேயே (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன் (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா?“ (அல்குர்ஆன் 51:21)

மேற்கண்ட வசனத்தில் இறைவன், மனிதனினுள்ளிருக்கும் அதிசயங்கள் பற்றிய ஆய்வை மேற்கொள்ளச் சொல்கின்றான். சுருக்கமாகச் சொல்வதானால், மனித சமுதாயத்தில் மருத்துவர்கள் ((doctors) உருவாக வேண்டும் என்பதையும் இறைவன் கூறுகின்றான் .

நீங்கள் ஏன் சிந்திப்பதில்லை, அவர்கள் ஏன் சிந்திப்பதில்லை என்ற வினாவைத் திருக்குர்ஆன் 56க்கும் மேற்பட்ட இடங்களில் எழுப்பியுள்ளது. சிந்தனைக்கும், அறிவுத் திறனுக்கும் இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம் ஏட்டில் மட்டும் பொறிக்கப்பட்ட கொள்கைகள் அல்ல! வரலாற்றில் செயல்வடிவம் பெற்றுள்ள உண்மையும் கூட.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்கள் மத்தியில் இறைத்தூதை எடுத்துவைத்த போதெல்லாம் பலமுறை, நீங்கள் சிந்திக்க வேண்டாமா அவர்கள் சிந்திக்கமாட்டார்களா என்ற கேள்வியுடன்தான் கொள்கையை முன்வைத்தார்கள். நான் கூறும் கொள்கைகளை, கண்களைக் கட்டிக்கொண்டு ஏற்றுக்கொள்ளுங் கள் என்று அவர்கள் ஒருபோதும் கூறியதில்லை.

இக்கருத்தைப் பிரதிபலிக்கும் முகமாக உலகப்புகழ் பெற்ற "Reaers digest' வெளியிட்ட "The last Two million years" எனும் நூலில் "The great civilization' என்ற அத்தியாயத்தில் பக்கம் 15ல் உள்ளதை குறிப்பிடலாம்.

A Self Sufficient world

Islamic Civilization was a product of many minds, of many races. But, their individual talents might easily have gone to wast had it not been for the genius of Mohamed...

...During the five centuries when Arabic was the international language of sliene a man could live a full, useful and rich life within the world of Islam, with no thought for the darkness outside.

தன்னிறைவான உலகம்

இஸ்லாமிய நாகரீகம் என்பது பலதரப்பட்ட மக்களின் தனித்திறமைகளும், பல இன மக்களும் சேர்ந்த ஒரு சமுதாய அமைப்பு, ஆனால் இந்த மக்களின் அனைத்து முன்னேற்றமும் முஹம்மத்(ஸல்) அவர்களின் ஞான வழிகாட்டுதல் இல்லாமல் நடந்தேறியிருக்காது.

...விஞ்ஞானத்தின் சர்வதேச மொழியாக அரபி இருந்த ஐந்து நூற்றாண்டுகளில் ஒரு சராசரி மனிதனால் வெளி உலக மக்களின் இருள்மயமான தாக்கத்திலிருந்து விடுபட்டவனாக, முழுமையான, கம்பீரமான வாழ்வை இஸ்லாமிய உலகிற்குள் வாழமுடிந்தது.

சாதனைகள் படைத்த விஞ்ஞானிகளைச் சாடிய மதத்தலைவர்கள் வரலாற்றில் மிகைத்து இருந்திருக்கிறார்கள். எந்த இறைவன் படைப்புகளைப் படைத்தானோ அதைப் பற்றிச் சிந்திக்கத் தடைசெய்யும் முகமாக, இறைத்தூதர்கள் எப்படிச் செயல்பட முடியும்? எனவேதான் விஞ்ஞானத்திற்குப் பெரும்பங்காற்றிய மகத்துவமிக்க சமுதாயத்தை உருவாக்கியவர் களாக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மிளிர்ந்துள்ளார்கள். எனவேதான் அவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட தூதர் மற்றும் விஞ்ஞான உலகின் ஆசான் என முஸ்லிம் சமுதாயம் நம்பிக் கொண்டிருக்கிறது.

## தூதுத்துவம் சிந்தனைக்கு எதிரானதா?

கடந்த சில காலங்களாகவே முஸ்லிம் அறிஞர்களில் பலர் கம்யூனிஸத்தை எதிர்த்து தங்களின் எழுத்து மற்றும் பேச்சுக்களைத் தொடுத்து வந்தார்கள். தற்போது கம்யூனிஸம் மரணப்பிடியில் சிக்கிக்

கொண்டிருக்கிறது. கம்யூனிஸம் கொடி கட்டிப் பறந்த ரஷியாவில் கூட அது தன்னை இழந்து நிற்கும் நிர்பந்தத்திற் குள்ளாகிப் போனது.

முஸ்லிம் அறிஞர்களின் தற்போதைய பார்வை மேற்கத்திய வாதம் (Westernism) மற்றும் கலாச்சாரத்தின் மீது பாய்ந்து கொண்டிருக்கிறது. இக்கொள்கை மற்றும் கலாச்சாரத்தை எதிர்க்கும் முஸ்லிம் அறிஞர்களின் எழுத்தில் சற்று தடுமாற்றம் இருக்கிறது. மேற்கத்தியக் கொள்கை மற்றும் கலாச்சாரத்தை எதிர்ப்பதோடு அவர்களின் தொழில் நுட்பங்களையும் (Technology) எதிர்க்கிறார்கள். இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேய அரசை எதிர்த்து முஸ்லிம்கள் போராடிக் கொண்டிருந்த போது, முஸ்லிம் அறிஞர்களில் பலர், ஆங்கிலம் கற்றுக் கொள் வதைக் கூட ஹராம் (குற்றம்) என்று தீர்ப்பு கூறினர்.

உண்மையிலேயே இவர்கள் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்பவர்களாக இருப்பின் அவர்கள் போதித்த இறைச்சட்டங்களுக்கு எதிரான கொள்கைகள், சித்தாந்தங்கள் மற்றும் கலாச்சாரங்களை மட்டுமே விமர்சனத்திற் குள்ளாக்க வேண்டுமே தவிர, அவர்களின் தொழில் நுட்பங்களை அல்ல. ஏனெனில், உலகிற்கே விஞ்ஞான அறிவை இஸ்லாம்தான் புகட்டியது. அது ஒருபோதும், கலைகளையும், தொழில் நுட்பங் களையும் எதிர்ப்பதில்லை என்பதும் முஸ்லிம்களின் நம்பிக்கை.

முஸ்லிம்கள் சிலரின் தவறான நடவடிக்கைகளால் ஒட்டு மொத்த இஸ்லாத்தையும் குறையுள்ளதாகச் சிலர் எண்ணுவதுண்டு. உண்மையில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் போதனைகள் இவ்வாறு தவறான வழி காட்டுதலைக் கொண்டிருக்கவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மதீனா வந்தடைந்த, பதினெட்டாவது மாதத்தில் நிகழ்ந்த 'பத்ர்' போரில் யுத்தக் கைதிகளாகப் பலர் பிடிக்கப்பட்டு மதீனா கொண்டுவரப்பட்டனர். அவர்களில் பலர் தங்களின் உறவினர்களால் ஈட்டுத்தொகை கொடுக்கப்பட்டு இஸ்லா மிய அரசிடமிருந்து மீட்டுச் செல்லப்பட்டனர். சிலர் ஈட்டுத் தொகை கொடுப்பதற்குத் தகுதியின்றி தத்தளித்தனர். அப்போது அவர்கள் பயின்று வைத்திருந்த கல்வியை மதீனா தேசம் வாழ் முஸ்லிம்களுக்கும் கற்றுக் கொடுத்துவிட்டு, சுதந்திரமாகச் செல்லலாம் என்ற சலுகை மதீனா தேசத்தின் அதிபர் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களால் வழங்கப் பட்டது. அதற்கிணங்கிய யுத்தக் கைதிகள் தாங்கள் கற்று வைத்திருந்த கல்வியைக் கற்றுக் கொடுத்து விட்டு, விடுதலையானார்கள் என்ற செய்தியை இப்னு ஹிஷாம் உட்பட பல வரலாற்று அறிஞர்கள் எழுதிய நூல்களில் காணமுடிகிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டுதல் மனித சமூகத்தால் கடைபிடிக்கப்பட வேண்டிய ஒன்றாகத் திகழ்கிறது. மேற்கத்திய நாடுகளில் பல தொழில் நுட்பங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பெற்றுக்கொண்டு, மனித சமுதாயத்திற்குப் பலனளிக்கச் செய்வது இஸ்லாத்தில் நம்பிக்கையுள்ளவர்களின் கடமையாகிறது.

மேற்கத்தியக் கொள்கைகள் மற்றும் கலாச்சாரங்களை எதிர்க்கிறோம் என்ற பெயரில் அவர்களால் தயாரிக்கப்படும் உடைகள், எழுதுகோல்களையும், மின் உபயோகப் பொருட் களையும் இதர தயாரிப்புகளையும் பயன் படுத்தக்கூடாது என்றும் அவர்கள் போதிக்கும் விஞ்ஞானக் கல்வியைக் கற்றுக்கொள்ளக் கூடாது என்றும் வாதிடுவது மனித சமூகத்திற்கு நன்மை செய்வதாக ஆகிவிடாது. உண்மையில் அது அறிவுக்குத் திரையிடுவதாகவே இருக்கும். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைப்படி, உலகிலேயே மனிதன்தான் சிறந்த படைப்பு அழகான வடிவத்தில் படைக்கப் பட்டுள்ளான் என்ற சிறப்பு இவனுடைய உடல் அமைப்பைக் கொண்டோ, நிற வேறுபாட்டைக் கொண்டோ, இந்த நாட்டைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையிலோ அல்ல் பகுத்தறியக் கூடிய ஆற்றல் என்ற ஒன்றினால் மட்டுமே மனிதன் சிறந்தோங்குகின்றான்.

முதல் மனிதர் ஆதம்(அலை) அவர்கள் படைக்கப்பட்டதும், கல்வியைக் கொண்டுதான் அவர்களுக்குச் சிறப்பு வழங்கப்பட்டது.

’இறைவன் எல்லாப் பொருள்களின் பெயர்களையும் ஆதத்திற்குக் கற்றுக் கொடுத்தான். பிறகு அவற்றை வானவர்களின் முன்வைத்து உங்கள் கருத்து சரியானால், இவற்றின் பெயர்களைச் சற்று சொல்லுங்கள்‘ எனக் கூறினான். ’குறை ஏதுமில்லா தூயவன் நீயே! நீ கற்றுக் கொடுத்ததைத் தவிர வேறெதுவும் எங்களுக்கு தெரியாது. உண்மையில் நீ மட்டுமே பேரறிவும் மிக்க ஞானமும் உடையவன்!‘ என்று கூறினார்கள். (வானவர்கள்.) (பின்னர்) இறைவன் கூறினான், ’ஆதமே! இவற்றின் பெயர்களை நீர் அவர்களுக்கு அறிவியும்!‘ அவர், அவற்றின் பெயர்களை அறிவித்ததும், ”வானங்களிலும், பூமியிலும் (உங்களுக்கு) மறைந்து இருக்கக்கூடிய (உண்மைகள்) அனைத்தையும் நிச்சயமாக நான் நன்கு அறிவேன். மேலும் நீங்கள் வெளிப்படுத்தக் கூடியவற்றையும், மறைத்துக் கொண்டு இருப்பவற்றையும் நான் நன்கு அறிவேன் என்று உங்களிடம் நான் கூறவில்லையா?“ எனக் கேட்டான். (இறைவன்) பின்னர் ”நீங்கள் ஆதத்துக்குப் பணியுங்கள்!“ என்று வானவர்களுக்குக் கட்டளையிட்டபோது இப்லீஸைத் தவிர அவர்கள் எல்லோரும் பணிந்தார்கள். மேலும் (இப்லீஸ்களாகிய) அவன் (இறைவனின்) கட்டளையை மறுத்தான். மேலும் ஆணவம் கொண்டு விட்டான், (இதன் காரணமாக) இறை மறுப்பாளர்களில் ஒருவனாகவும் ஆகிவிட்டான். (அல்குர்ஆன்: 2:30-34)

சில தலைவர்கள் தங்களின் சுய விருப்பு வெறுப்புக்காக இங்கு செல் இங்கு செல்லாதே! இதை வாங்கிக் கொள் இதை வாங்காதே! என்பது போன்ற பிரச்சாரங்களை மேற்கொள்கிறார்கள். இது மனித இயல்பு. இறைத்தூதர்களிடம் இவ்வாறான பண்புகளைக் காணமுடியாது. அவர்களுக்கு இடப்பட்ட கட்டளை எல்லாம் மனித குலத்தை அறிவு ரீதியில் மேம்படச் செய்ய வேண்டும் என்பதுவே. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அறிவுக்கு ஒருபோதும் முட்டுக் கட்டை போட்டதில்லை. அது மட்டுமன்றி, அறிவியலுக்கு அவர்கள் அடித்தளமிட்டுள்ளார்கள் என்பதையும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

## தலைவர்களும் தொண்டர்களும்

அவர்கள் அரசர்கள்! எனவே தங்களுக்குக் கீழிருப்போரை ’அடிமைகளே!‘ என்றழைக்கிறார்கள். அவர்களும் இவர்களும் அகிலமெல்லாம் படைத்த இறைவன் ஒருவனுக்கு மட்டுமே அடிமை என்பதை மறந்து விட்டார்கள் போலும்.

அவர்கள் ஆன்மீகத் தலைவர்கள்! எனவே, தங்களுக்குக் கீழுள்ளோரைச் ’சீடர்களே!‘ ’பாவிகளே!‘ என்றழைக்கிறார்கள். இவர்களென்ன பாவமே செய்யாத பரிசுத்தவான்களா?

அவர்கள் அரசியல் தலைவர்கள்! எனவே தங்களுக்குக் கீழுள்ளோரைத் ’தொண்டர்களே!‘ என்றழைக்கிறார்கள். இத் தலைவர்களுக்குத் தொண்டு செய்யத்தான் அவர்கள் பிறந்துள்ளார்களா?

இவ்வாறான அடிமை விலங்கு மனிதச் சிந்தனையில் வெகு காலங்களுக்கு முன்பிருந்தே போடப்பட்டுள்ளது. இதை உடைத்தெறியும் திறனைக் கொண்டவர் எவருமில்லை. இவற்றை உடைத்தெறிய முற்பட்டோரின் உள்ளங்கள்தான் உடைக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக பலருடைய இரத்தம் குடிக்கப்பட்டிருக்கிறது ஆனாலும் தீர்வு கிடைத்த பாடில்லை.

இவற்றை உடைத்தெறிவதற்கான வழியே இல்லை என்று கூற முடியாது. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இவற்றிற்கெல்லாம் தீர்வு கண்டுவிட்டார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை நெறி அடிமை விலங்குகள் அனைத்தையும் தகர்த்துவிட்டது. அடிமைகளாக அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்த பல மனிதர்கள் இன்றைய அரபு நாட்டின் கௌரவமிக்க குடிமக்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை இன்று யாரும் அடிமைகள் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் காலத்தில் அடிமையாக இருந்து மீட்கப்பட்டவரான பிலால்(ரலி) அவர்கள்தான் அன்றைய இஸ்லாமிய அரசின் நிதித்துறைப் பொறுப்பாளராக இருந்தார் என்பது வரலாற்றுச் சான்று.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கிடையே செல்வர், ஏழை, கருப்பர், வெள்ளையர், அடிமை, எஜமானர் என்ற எவ்வித வித்தியாசத்தையும் காண்பிக்கவில்லை. இறையச்சத்தில் மிகைத்தவர் மட்டுமே உயர்ந்தவர் என்ற கொள்கையில் மிக உறுதியாக இருந்தார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தம் தோழர்களைத் 'தோழர்களே!' என்பதைத் தவிர்த்து வேறு வார்த்தைகளால் ஒருபோதும் அழைத்ததில்லை. ஏன்? தம்மைத் திட்டிய எதிரியைக்கூட இழித்தோ பழித்தோ பேசியதில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீது அவர்களின் தோழர்கள் ஈடில்லா அன்பு கொண்டிருந்தார்கள். அவர்கள் அதற்காக இறைத்தூதரின் சிலையைச் செய்து நட்டுவைத்து அதற்கு மாலையிட்டோ, படங்கள் வரைந்து பத்திகள் கொளுத்தியோ, உடலில் பச்சை குத்தியோ பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட நிலையில் அன்பை வெளிப்படுத்தியதில்லை. யாரும் இறைத்தூதர் முன்பு கை கட்டி நின்று நடிக்கவில்லை. காலில் விழுந்து ஏமாற்றவில்லை .இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களும் அதை அனுமதிக்கவில்லை.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கட்டளையைத் தோழர்கள் அனைவரும் முறையாக நிறைவேற்றித் தங்கள்அன்பை காண்பித்தார்கள். இதுவல்லாத முறைகளில் அன்பைக் வெளிப்படுத்துகிறோம் என்ற பெயரில் தம் சமுதாயம் வழிதவறிச் செல்வதை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. தம்மை ஓர் இறைத்தூதர் என்ற தரத்திற்குமேல் உயர்த்துவதைப் பெரும் பாவம் என்றும் அதற்கு இறைவனிடத்தில் என்றும் மன்னிப்பே இல்லை என்றும் தம் தோழர்களை எச்சரித்து வந்தார்கள்.

எங்களின் தலைவர்கள் மீது அன்பு வைத்திருக்கின்றோம் என்று இன்றையக் காலகட்டத்தில் கூறிக் கொள்வோர் அனைவரும் தலைவர்களின் சிலைகள் மற்றும் படங்களின் மீதே போலி அன்பு வைத்திருக்கிறார்கள். அவர்களின் அன்பு உள்ளத்தில் ஊன்றி நின்று தங்கள் தலைவர்களின் கொள்கைகளை நிலைத்திருக்கச் செய்யவில்லை. இன்றையத் தலைவர்களில் சிலர் தங்களின் சிலைகளையும் படங்களையும் தாங்களே திறந்து வைத்து, மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிவிடுகிறார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீது அவர்களின் அன்றையத் தோழர்கள் கொண்டிருந்த அன்பும் சரி, இன்றைய முஸ்லிம் சமுதாயம் கொண்டிருக்கும் அன்பும் சரி ஈடு இணையற்றது. இவர்கள் அனைவரும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைத் தங்கள் உயிரினும் மேலாக மதிக்கின்றனர்.

இன்று இருக்கும் அனைத்துத் துறைகளின் தலைவர்களும் தங்களைப் பின்தொடர்வோரைக் காலில் விழவைத்து மகிழும் காட்சிகளும், வெட்கத்தையே இழந்து இவர்களின் கால்களில் விழுந்து தம்மைத் தாமே தரம் தாழ்த்திக் கொள்ளும் தொண்டர்களின் மடமையும் சுயமரியாதையுடன் இருப்போருக்கு வேதனையை அளிப்பதோடு தலைக் குனிவையும் ஏற்படுத்துகிறது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் அவர்களின் தோழர்களில் ஒருவர் வந்து "இறைத்தூதர் அவர்களே! நாங்கள் சிரியா நாட்டிற்குச் சென்றபோது, அங்குள்ள மக்கள் தங்கள் அரசரின் காலில்

விழுகிறார்கள். ஆனால் அவரோ அதற்கு அருகதை அற்றவர். தங்களை எங்களில் மிகவும் உயர்ந்தவராகக் காண்கிறோம். எனவே நாங்கள் தங்களின் காலில் விழலாம் தானே!“ என்று கேட்கிறார். அப்போது இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள், அதைத் தடைசெய்து, வணக்கம் என்பது இறைவன் ஒருவனுக்கு மட்டுமே தவிர வேறு எவருக்குமில்லை என்பதைத் தம் தோழர்களுக்கு உணர்த்துகிறார்கள் என்ற செய்தியை இப்னுமாஜா எனும் நூலில் காண முடிகிறது.

இன்றைய அரசியல் தலைவர்கள் லஞ்சம் பெற்றும், கொள்ளையடித்தும், நிதியுதவி என்ற பெயரில் தம் தொண்டர் களிடம் கௌரவமாக நிதி பெற்றும் தங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி வருகிறார்கள்.

இன்றைய அரசியல் தலைவர்கள் மீது அவர்களின் தொண்டர்கள் கொண்டிருக்கும் அன்பைவிடப் பலகோடி மடங்கு அன்பைத் தம் தோழர்களிடமிருந்து பெற்றிருந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள எண்ணியிருந்தால், உலகப் பணக்காரர்களின் வரிசையில் இடம் பெற்றிருப்பார்கள். ஆனால், அவர்கள் அவ்வாறு செய்ய வில்லை. ’ஜகாத்‘ எனும் பொது நிதியையும், ’ஸதகா‘ எனும் தர்மப் பொருட்களையும் தங்களுக்கும் தங்களின் குடும்பத்தைச் சார்ந்த வாரிசுகளுக்கும் முற்றிலுமாகத் தடை செய்துகொண்டார்கள்.

ஒரு முறை மதீனா நகரில் ஜகாத் நிதி திரட்டப்பட்டு பேரீச்சம் பழத்தின் ஒரு பெரும் குவியல் குவிக்கப்பட்டிருந்தது. அப்போது இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் பேரப்பிள்ளையான ஹஸன்(ரலி) அவர்கள் அங்கு வருகிறார்கள். பேரீச்சம்பழத்தின் பெரும் குவியலைப் பார்த்த அவர் அதிலிருந்து ஒரு பழத்தை எடுத்து தம் வாயில் வைத்து மென்றுவிடுகிறார். அதைக் கண்ணுற்ற இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அதைத் துப்பிவிடுமாறு கூறி ”தர்மப் பொருட்களை நாம் சாப்பிடக் கூடாது என்பது உனக்குத் தெரியாதா?“ என்று கேட்டார்கள் எனும் செய்தி புகாரி, முஸ்லிம் எனும் நூல்களில் காணப்படுகிறது.

ஹஸன்(ரலி) அவர்கள் அப்போது சிறு குழந்தைதான். இது பொதுநிதி என்பதைப் புரிந்துகொள்ளும் வயது அவருக்கு இல்லை. எனவேதான் அதை எடுத்து உண்ண முற்பட்டார். அதனால் பாதிப்பு ஏதும் ஏற்படப்போவதில்லை. இருப்பினும்கூட இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அதைத் தடுத்து, மனித சமுதாயத்தில் தமக்குப் பின்பு வரக்கூடிய தலைவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளார்கள்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுடன் இருந்த தோழர்கள் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், ”அவர்கள் என்னிடமே அதிகமான பிரியம் கொண்டவர்களாக இருந்தார்கள்“ என்றே கூறினார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் நட்பு தம் தோழர்களிடம் இவ்வாறுதான் இருந்தது.

உலக வரலாற்றில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு நிகராக ஒரு தலைவர் இருந்தார் என்று எவரைத்தான் கூறமுடியும்? இறைத்தூதுத்துவமே அவர்களை இந்த அளவிற்கு உயர்த்தியது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை களங்கமற்ற வெளிச்சத்தைப் போன்று வெளிப்படையானது. அதில் பார்வையைச் செலுத்துபவர்கள் வெண்மையைத்தான் காண்பார்கள். அந்த வெண்மையைக் கொண்டு இன்றைய அகிலமே சிறப்படைந்து கொண்டிருக்கிறது.

நிச்சயமாக அந்தச் சிறப்பு இம்மைக்கு மட்டுமல்ல, மறுமை வாழ்க்கைக்கும் அவசியமானது என்ற நம்பிக்கையில் முஸ்லிம்கள் உறுதியாக உள்ளனர்.

## சமூகச் சேவை

சமூகச் சேவைகள் செய்யக்கூடிய அமைப்புகள் உலகம் முழுதும் பல்கிப் பெருகிவருகின்றன. இச்சேவையில் ஈடுபட்டிருப்பவர்களை உலகமே புகழ்ந்து கொண்டிருக்கிறது. எந்த அளவிற்கென்றால் 'எய்ட்ஸ்' நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரோடு சேவை அமைப்பிலுள்ள எவரேனும் கை குலுக்கிவிட்டால் அவருக்குப் பாராட்டுக்களும், பரிசுகளும் குவிகின்றன் அவர் கௌரவிக்கப்படுகிறார்.

பால்வினை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஆதரவற்றவர்களாய் நிற்கும் முதியோர்களுக்கும் காப்பகங்கள் அமைக்கப்படுகின்றன. இப்பணியில் ஈடுபடுபவர்கள் கருணை யுள்ளங்கொண்ட காருண்ய மகான்கள் என்று போற்றப் படுகின்றனர். 'மது அடிமைகளுக்கு மறுவாழ்வு மையங்கள்' அமைக்கப்படுகின்றன. இப்பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு அரசு உதவிகளும், பாராட்டுக்களும் பெருகிவருகின்றன.

மனித நேயங்கொண்ட இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களையும், இறைச் சட்டங்களையும் பின்பற்றி வாழும் முஸ்லிம்கள் ஏன் இவைபோன்ற சமூக சேவைகளில் அதிகக் கவனம் செலுத்துவதில்லை எனக் கேள்விக் கணைகள் இன்று முஸ்லிம்களை நோக்கித் தொடுக்கப் படுகின்றன.

உண்மைதான்! இன்றைய முஸ்லிம்களிடத்தில் இவைபோன்ற சமூகச் சேவை அமைப்புக்கள் அதிகம் காணப்படவில்லை. முஸ்லிம் சமுதாயம் ஒன்றைச் செய்யவில்லை என்பதால் அது இஸ்லாத்தில் இல்லை என்றும், முஸ்லிம் சமுதாயம் ஒன்றைச் செய்துவிட்டால் அதுதான் ஒட்டு மொத்த இஸ்லாம்போலும் என்றும் எண்ணுதல் முறையல்ல. ஏனெனில், இன்றைய சசூழலில் பெருமளவு முஸ்லிம்கள் இஸ்லாத்தையும், அதன் கொள்கைக் கோட்பாடுகளையும் அறிந்திருக்கவில்லை என்றே குறிப்பிட முடியும். எனவே இவர்களைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு இஸ்லாத்தின் மீது சேற்றை அள்ளி வீசுவதில் அர்த்தம் இல்லை.

நோயாளிகளுக்குக் காப்பகங்கள் அமைப்பதையோ, ஆதரவற்றவர்களுக்கு ஆதரவளிப்பதையோ இஸ்லாம் தடை செய்யவில்லை. இவற்றை எல்லாம் ஒரு முஸ்லிம் செய்தாக வேண்டும் என்று இஸ்லாம் பணிக்கிறது. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தங்கள் சொத்துக்கள் அனைத்தையும் ஆதரவற்றவர்களுக்காகச் செலவிட்டுள்ளார்கள் என்பதையும் வரலாறு உணர்த்திக் கொண்டிருக்கிறது. இஸ்லாம் கூறியுள்ள சமூக சேவைகள் நடை முறைக்கு வருமேயானால், உலக மக்கள் அனைவரும் நலமாய் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

''நோயாளியைச் சந்தியுங்கள் (ஆறுதல் கூறுங்கள்), பசித்தவருக்கு உணவளியுங்கள், (நல்ல) கைதியை விடுவியுங்கள்'' என்று இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என அபூமூஸா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி)

''மறுமை நாளில் அல்லாஹ் (மனிதனை நோக்கி) ''ஆதமின் மகனே! நான் நோயுற்றிருந்தேன். அப்போது நீ என்னை நலம் விசாரிக்க வரவில்லையே?'' என்று கேட்பான். (அதற்கு மனிதன்) ''என் இரட்சகனே! நான் எப்படி உன்னை நலம் விசாரிப்பேன்? நீ தான் உலகிற்கே இரட்சகனாயிற்றே?'' என கூறுவான். (அதற்கு) ''என்னுடைய இன்ன அடியான் (உலகில்) நோயுற்றிருந்தான். அதை நீ அறியவில்லையா? அவனை நீ விசாரிக்கவில்லையே? அவனை விசாரித்திருந்தால், அங்கு என்னைக் கண்டிருப்பாய்!'' என அல்லாஹ் கூறுவான்' என்று, நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம்)

பால்வினை நோய்க் காப்பகங்கள்

பால்வினை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் காப்பகங்கள் வைத்திருப்போர், விபச்சாரத்திற்கு எதிராகவும் குரல் கொடுத்தாக வேண்டும். விபச்சாரத்தை அடியோடு ஒழிப்பதற்குப் பாடுபட வேண்டும். அப்படி அவர்கள் செய்தால்தான், முழுமையான சமூகச் சேவையாக அவர்களின் காப்பகங்கள் அங்கீகரிக்கப்படும். இப்படிப்பட்ட உயர்வான சமூகச் சேவையை இஸ்லாம் கூறியுள்ளது.

”விபச்சாரத்தின் அருகே கூடச் செல்லாதீர்கள்! நிச்சயமாக அது மானக் கேடான செயல், மிகத் தீயவழி!“ (அல்குர்ஆன் 17:32)

”விபச்சாரம் செய்யும் பெண் இன்னும் விபச்சாரம் செய்யும் ஆண் ஆகிய இருவரில் ஒவ்வொருவருக்கும் நூறு கசையடி அடியுங்கள். “ (அல்குர்ஆன் 24:2)

”திருமணத்திற்குப்பின் விபச்சாரம் செய்பவன் மரண தண்டனைக்குள்ளாவான்“ என்று இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, புகாரி, முஸ்லிம் ஆகிய ஹதீஸ் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பால்வினை நோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களைக் காப்பது மட்டும் சமூகச் சேவையாகாது. பால்வினை நோயையே இல்லாமல் அதை முற்றாக அழித்திடுவதுதான் முழுமையான சமூகச் சேவையாக அங்கீகரிக்கப்படும்.

முதியோர்க் காப்பகங்கள்

முதியோர்க் காப்பகங்கள் வைத்திருப்போர் முதியோர்களைப் பராமரிப்பதில் குறை வைக்கவில்லை என்றாலும், ஆதரவற்ற நிலைக்கு முதியோர் தள்ளப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியே இவர்கள் மக்களிடம் இது தொடர்பாகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தாலும் அதில் இன்னும் சற்று வேகம் தேவைப்படுகிறது. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் போதனைகளும், திருக்குர்ஆனின் வரிகளும் இந்த விஷயத்தில் சரியான பாடம் கற்றுத் தருகின்றன.

பெற்றோரை நோவினை செய்யலாகாது அவர்களிடம் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும் ’சீ...‘ என்றுகூட அவர்களைப் பார்த்துக் கூறக்கூடாது அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றெல்லாம் திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது.

”இறைவனுக்கு இணைவைத்தலும், பெற்றோர்களை நோவினை செய்வதுமே பெரும் பாவம்‘ என்று இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என அபூபக்ரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி)

ஒவ்வொருவரும் தம் பெற்றோரைப் பேணிக் கொண்டால், முதியோர் இல்லங்களுக்கு எவ்வித அவசியமும் ஏற்படாது.

அனாதை இல்லங்கள்

ஆதரவற்றுத் தள்ளாடும் சிறுவர்களுக்கென சிறுவர்க் காப்பகங்கள் அமைக்கப்பட்டுச் சேவைகள் புரியப்படுகின்றன. அவர்களின் சேவை இன்னும் முழுமையடைய வேண்டுமானால், ஆதரவற்ற சிறுவர்கள் எப்படி உருவாகிறார்கள் என்பதை ஆய்வு செய்து, அவர்கள் உருவாவதையே தடுக்க முயற்சித்தல் வேண்டும்.

பொதுவாக ஆதரவற்ற சிறுவர்கள் உருவாவதற்கு, முறையற்ற ஆண் பெண் உறவுகளே காரணமாகின்றன. எனவே முறையற்ற ஆண் பெண் உறவுகளை இஸ்லாம் முற்றிலுமாகத் தடை செய்கிறது.

இங்கு ஒன்று கவனிக்கப்பட வேண்டும். குழந்தைகள் ஆதரவற்றுப் போகும் சசூழல் இயற்கையாகவே உருவாகும் போது, அவர்களைக் கவனிப்பதில் இஸ்லாம் மிகவும் அக்கறை காட்டச் சொல்கிறது. அனாதைகள் இயற்கையாகவே ஆதரவற்றவர்கள். அவர்களுக்காக இஸ்லாம் தெளிவானதொரு தீர்வைக் கூறியுள்ளது.

”தன்னுடைய பொருளை அனாதைகளுக்காகச் செலவிடுதல் புண்ணியமாகும்.“ (அல்குர்ஆன் 2:177)

”நன்மையை நாடி அநாதைகளுக்குச் செலவு செய்யுங்கள்!“ அல்குர்ஆன் 2:215

”பாகப் பிரிவினை செய்யும்போது அனாதைகள் வந்து விட்டால் அவர்களுக்கும் கொடுங்கள்.“ (அல்குர்ஆன் 4:8)

அனாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குவோர், நெருப்பையே விழுங்குகிறார்கள். அவர்கள் நரகத்தில் புகுவார்கள். அல்குர்ஆன் 4:10

”அனாதைகளைக் கடிந்துகொள்ளாதீர்கள்.“ அல்குர்ஆன் 93:9

”மறுமையை நம்பாதவனே அனாதைகளை விரட்டுகிறான்.“ அல்குர்ஆன் 107:2

இயற்கையாக ஏற்படும் இந்த அனாதைகளின் பிரச்சினை களைத் தீர்ப்பதற்காக ’யதீம்கானா‘ என்ற பெயரில் முஸ்லிம்கள் பல அனாதை இல்லங்கள் வைத்து நடத்திவருகிறார்கள்.

விதவைக் காப்பகங்கள்

கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் விதவைப் பெண்களுக்கும் சமூகச் சேவை மையங்கள் குறிப்பிட்ட அளவு பொருளாதார உதவிகளைச் செய்கின்றன. இது செய்யப்பட வேண்டியதே. ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களோ அப்பெண்களுக்குப் பொருளுதவி செய்வதைவிட அவர்களையே தங்களின் வாழ்க்கைத் துணைவியராக்கிக் கொள்ளுமாறு வழி காட்டினார்கள் வாழ்ந்து காட்டினார்கள்.

மது அடிமைகளின் மறுவாழ்வு இல்லங்கள்

மது அடிமைகளுக்கு மறுவாழ்வு மையங்கள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் மதுவையே ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதே இவர்களின் சமூகச்சேவைப் பூர்த்தியடையும். மது அடிமைகளின் காப்பகங்கள் உருவாவதை விட மது அடிமைகளே இல்லாது போக வேண்டும் என்பதைத்தான் இஸ்லாம் விரும்புகிறது. மதுவைத் தடைசெய்து மது அடிமைகளையே உருவாகவிடாமல் தடுத்த பெருமை இஸ்லாத்திற்குத்தான் உண்டு.

மது அருந்துபவர்களுக்கு ’நாற்பது செருப்படி‘ இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் காலத்தில் கொடுக்கப்பட்டது. பின்னர் அபூபக்கர்(ரலி) அவர்கள் காலத்தில் ’நாற்பது கசையடிகள்‘ கொடுக்கப்பட்டன என்பதாக புகாரி யில் இடம் பெற்றுள்ள செய்தியை நம்மால் காணமுடிகிறது.

முழு மதுவிலக்கினைக் கண்ணும் கருத்துமாக அமுல்படுத்த வேண்டும். அப்படியானால் மது அடிமைகளே உருவாகமாட்டர். அவர்களுக்கென காப்பகங்களும் தேவைப்படாது. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களால் உருவாக்கப்பட்ட சமூகம் இதற்கெல்லாம் அழகிய ஒரு முன் மாதிரியாகத் திகழ்கின்றது.

இறைவனை அடைவதற்கும், அவனைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும் ஒவ்வொரு சமூகமும் குறிப்பிட்ட மகான்களை, ரிஷிகளைக் கொண்டுள்ளது. இந்த மகான்களையும் ரிஷிகளையும் இறைவனின் அவதாரம் என அந்தச் சமூகங்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கூட்டத்திற்கும் இப்படி மகான், ரிஷி இருப்பதுபோன்று முஸ்லிம்களின் மகானாக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைச் சிலர் எண்ணிக் கொண்டிருக் கின்றனர். இவ்வாறு கருதுபவர்களின் வாதம் எவ்வாறானது என்று அறியப்படவேண்டும்.

அரங்கமும், அந்தரங்கமும்

பலஆன்மீகத் தலைவர்களின் வாழ்க்கை இரண்டு பக்கங்களுடையதாகவே இருக்கிறது. அரங்கம் ஒன்று! அந்தரங்கம் மற்றொன்று! எனவேதான் இன்றும் ஆன்மீகவாதிகள் என்று அழைக்கப்படும் சிலர் வெளியில் பல கதைகளைச் சொல்லி, அதிசயங்களை(?) நிகழ்த்துகிறார்கள்.

தான் பிறந்த மண்ணில் தன்னைப் பற்றி எல்லோரும் அறிந்து இருப்பதால், தன் கருத்து யாவும் செவியேற்கப் படாது என்ற காரணத்தினால் பெரும்பாலான ஆன்மிக வாதிகள் தன்னைச் சுற்றி இருப்போரைத் தவிர்த்து, பிறரை நாடிச் செல்கின்றனர். இவர் களைப் பற்றிய ஆரம்பகால உண்மை (வரலாறு)களைத் தெரிந்து கொள்ளாத மக்கள் மட்டுமே இவர்களைப் பின்பற்றுவார்கள்.

உதாரணமாக, இந்த இருபதாம் நூற்றாண்டில் சலசலப்பை ஏற்படுத்தி, தன்னைப் பின்பற்றும் மக்கள் கூட்டத்தை உருவாக்கிய ’ஓஷோ‘ என்றழைக்கப்படும் ரஜினிஷைக் குறிப்பிடலாம். ஓஷோ மத்தியப் பிரதேசத்தில் ’ருட்சுவாடா‘ எனும் ஊரில் பிறந்தார். ஆனால் சர்ச்சைக்குரிய ஆன்மிக அறைகூவலிட்டது அமெரிக்கா வில்.! ஓஷோ இந்தியாவில் இருக்கும்போது தன்னை ஒரு பெரும் ஆன்மிகவாதியாக, தத்துவஞானியாக அறிமுகம் செய்து கொண்டார். ஆனால் சிலகாலம் கழித்து,

""I am the beginning of a new Religious Consciousness"

”ஒரு நவீன மதத்தின் மனசாட்சிக்கு நான் ஆரம்பமாவேன்“ என்று "I say unto You" எனும் நூலில் "About Osho' எனும் அத்தியாயத்தில் ரஜினீஷ் குறிப்பிடுகிறார். இதை அவர் அமெரிக்காவில் கூறினார். தன்னை இந்தியாவில் இவ்வாறு அவர் ஏன் அறிமுகம் செய்யவில்லை யென்றால், தத்துவ இயலில் தன்னுடைய இளநிலைப் பட்டப்படிப்பை இந்தியாவில் கற்ற. பின்னர் சில ஆண்டுகள் தத்துவ இயல் துறையில் ஜபல்பூர் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார் ரஜினீஷ் என்ற செய்தி மேற்குறிப்பிட்ட நூலில் காணப்படுகிறது. ஆனாலும் அவர் இங்கு தன்னை மகானாகக் காட்டிக் கொள்ளவில்லை.

ஓஷோவுடைய சிந்தனைகளெல்லாம் சுய ஞானத்தால் உதித்தவையல்ல. கல்வி ஞானத்தால் வந்தது என்பதைச் சக மனிதர்கள் அறிந்திருந்த காரணத்தால் ஓஷோவின் சிந்தனைகள் இந்தியர்களிடம் அங்கீகாரம் பெறவில்லை. ரஜினீஷ் என்ற தனி மனிதர் மட்டுமல்லர், பெரும் ஆன்மிகவாதிகளின் போதனைகள் கூட அவர்களின் நெருங்கிய சுற்றத்தாரிடமோ தொலைதூர மக்களிடமோ மட்டுமே அரங்கேறுகின்றன.

ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இவ்வகையில் வித்தியாசப்படுகிறார்கள். மேலும் அவர்கள் ஓர் ஒப்பற்ற ஆன்மிகத் தலைவராகவும் திகழ்ந்து. இன்று வரை எல்லோராலும் பின்பற்றப்படுகிறார்கள்.

**""No one is a Hero in his Homeland Except MOHAMMED''**

”தன்னுடைய சொந்த நாட்டில் தலைவராக முஹம்மதைத் தவிர எவரும் அங்கீகரிக்கப்பட்டதில்லை.“

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்கள் மத்தியில் தம் கொள்கையை எடுத்து வைத்தபோது, அதை உண்மையென முதலில் ஏற்றுக்கொண்டவர்கள் அவர்களின் நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் மட்டுமே.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் சொன்னார்கள் என்றால் அது உண்மையாகவே இருக்கும். எனவே அங்கு மறுபரிசீலனைக்கு இடமில்லை, அதற்கு எவ்வித அத்தாட்சியும் தேவையில்லை என்று ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களில் முதன்மை வகித்தவர்கள் அவர்களின் நெருங்கிய நண்பரான அபூபக்ர்(ரலி) அவர்களும், உறவினரான அலீ(ரலி) அவர்களும்தாம்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கொள்கைக்கு மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு இருந்தது உண்மையே. ஆனால் அவர்களில் பலர் உண்மை விளங்கி இருந்தும் வறட்டுக் கௌரவத் திற்காக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை எதிர்த்தனர். ஆனால், எதிர்த்த அதே மக்கள் குறுகிய காலத்திலேயே அவர்கள் உயிர் வாழ்ந்தபோதே அவரை முழுமையாக ஏற்றுக்கொண்டனர்.

மக்களைக் கவர்ந்த விதம்

இறைவன் எமக்கு அருட்செய்துள்ளான். நான் உங்களுக்கு வழிகாட்டுகிறேன்(!) என்றுரைத்த ஆன்மிகவாதிகளில் மக்களிடம் வித்தைகளைக் காட்டியே அவர்களை வியப்படையச் செய்தனர்.

திடீரென்று புகழ்பெற்ற கம்பெனியின் கைக்கடிகாரங்களை வரவழைப்பதும், எலுமிச்சைப் பழங்களை வரவழைப்பதும், மல்லிகைப்பூ சிந்த வைப்பதும் இன்றைய ஆன்மீகத் தலைவர்களின் சாதனைகளில் பிரபலமானவை. இவர்களைப் பொறுத்த மட்டும் அகிலங்களை எல்லாம் படைத்துப் பாதுகாக்கும் இறைவனின் சக்தி இவ்வளவுதான் போலும்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் வித்தைகளைக் காட்டி மக்களை மயக்கிய மந்திரவாதி அல்லர் இன்னும், ”மக்களே! என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு அதிசயங் களைக் காட்டுகிறேன் உங்களைப் பற்றிய மறைவான விஷயங்களை உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் எதிர்காலம் செல்வச் செழிப்புற வகை செய்கிறேன்“ என்று கூக்குரலிட்டு எவரையும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அழைத்ததே இல்லை. மாறாக,

”என்னிடம் இறைவனின் பொக்கிஷம் இருக்கிறது. புதையல் இருக்கிறது என்று நான் கூறவில்லை. மறைவான விஷயங்களை நான் அறிந்தவன் என்றும் நான் கூறவில்லை. நான் ஒரு வானவர் (மலக்கு) என்றும் கூறவில்லை. நான் உங்களைப்போன்று மனிதன்தான். நான் இறைவனின் தூதர். உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய வந்திருப்பவன். எனவே நீங்கள் உங்களைப் படைத்த அந்த ஒரே இறைவனை மட்டுமே வணங்குங்கள். அவனுக்கு மட்டுமே கட்டுப்படுங்கள். அவனை அஞ்சி வாழுங்கள். கல்லையும், மண்ணையும், மரத்தையும் நீங்கள் வணங்கி அறிவுக்குத் திரையிட்டுக் கொள்ள வேண்டாம். நீங்கள் வணங்கும் இந்தச் சிலைகள் உங்களைப் படைத்தனவா? அல்லது நீங்கள்தான் அதனைப் படைத்தீர்களா? என்னையும், உங்களையும், நமக்கு முன்பிருந்தோரையும் படைத்த அந்த ஒரே இறைவனை மட்டும் நான் வணங்கச் சொல்கிறேன்!“ என்று கூறித்தான் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்களைத் தன் பக்கம் அழைத்தார்கள்.

ஆன்மிகத் தலைவர்களில் வேறு சிலர் பெயர் பெற்று மக்களைக் கவர்ந்துள்ளார்கள். தங்களை, மனிதர்களை விட்டும் வித்தியாசப்படுத்தியே உள்ளார்கள்.

அவர்களின் உடை வித்தியாசமானது. இருப்பிடம் வித்தியாச மானது. பேச்சுமுறை வித்தியாசமானது. ஏன்? அவர்களின் வாழ்க்கையே முன்னுக்குப் பின் முரணானது. வேறு சிலர் பெண்ணின் வாழ்க்கை மற்றும் வாடை கூடத் தம் மீது படக்கூடாது என்று கூறித் தம்மை மனிதர்களிலிருந்து வித்தியாசப்படுத்திக் காண்பித்துள்ளார்கள். இதற்கு உதாரணமாக முனிவர்களையும், ரிஷிகளையும் எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் காடு மேடுகளைச் சுற்றித் தங்களையே மாய்த்துக் கொண்டவர்கள். மக்கள் தொடர்பை அறுத்துக் கொண்டவர்கள். இவர்களால் மக்களுக்குத் தீர்வு ஏதும் கூற முடியுமா? உண்மையில் இவர்களின் வாழ்க்கை அறிவு பூர்வமானதன்று. இவர்களின் வாழ்க்கையைப் பின்பற்றினால் குறுகிய காலத்திற்குள்ளேயே மனித இனம் முற்றிலும் அழிந்துவிடும். மனித இனத்தை அமைதியாக அழிக்கும் திட்டத்தையே இவர்கள் அறிமுகம் செய்துள்ளார்கள்.

முனிவர்களும், ரிஷிகளும் தங்களை வித்தியாசப் படுத்திக் காண்பித்து மக்களைக் கவர்ந்தது போன்று இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் எவருடைய கவனத்தையும் கவரவில்லை. மாறாக,

”நானும் உங்களைப்போன்று மனிதன்தான். நான் இரவில் விழித்திருந்து வணங்கவும் செய்கிறேன் தூங்கவும் செய்கிறேன். உங்களையும் என்னையும் படைத்தவனுக்காக (பகல்) காலமெல்லாம் நோன்பும் நோற்கிறேன். நோன்பு நோற்காமல் இருந்து உண்ணவும் செய்கிறேன். நான் திருமணம் செய்துள்ளேன். எவர் இவ்வாறு செய்யவில்லையோ அவர் என்னைச் சார்ந்தவரல்லர் என்று இறைத்தூதர் அவர்கள் தம் தோழர்களுக்கு உபதேசம் செய்தார்கள்“ என அனஸ்(ரலி) அறிவித்துள்ள செய்தியை புகாரி எனும் நூலில் காணலாம்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மகனார் இப்ராஹீம் அவர்கள் சிறுவயதிலேயே இறந்து போனார்கள். அப்போது அங்கு அமர்ந்திருந்த இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கண்களில் நீர் தளும்பியது! இதைக் கண்ட அவர்களின் தோழர்களுக்கு வியப்பு! இவ்வளவு பெரிய மகான் அழுகிறாரே என்பதுபோன்று பார்க்கலாயினர். அப்போது முஹம்மத்(ஸல்) அவர்கள் தோழர்களைப் பார்த்து ’நானும் உங்களைப் போலவே பிள்ளைப்பாசம் கொண்ட மனிதன்தான்‘ என்பதை உணர்த்தினார் கள். இந்தச் சம்பவத்தை அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கும் புகாரி, முஸ்லிம், அஹ்மத் போன்ற நூல்களில் காணலாம்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கையை எந்தவொரு கோணத்தில் ஆய்வு செய்தாலும், அவர்கள் தம்மைப் பிற மனிதர்களிடமிருந்து வேறுபடுத்திக் காண்பித்து வந்தார்கள் என்பதற்குத் துளியளவும் இடமே இல்லை. அவர்கள் தங்கள் நற்குணம் மற்றும் நற்செயலால் மட்டுமே பிற மனிதர்களை விட்டும் வேறுபட்டு உயர்ந்து காணப்பட்டார்கள்.

இறைவன் மீது தாம் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் அச்சத்தின் மூலம், எதார்த்தமான ஓரிறைக் கொள்கையை மிக ஆழமாகப் போதித்துத்தான், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் மக்களை இறைவழியில் ஈர்த்தார்களே தவிர, அதிசயத்தைக் கண்டு மயங்கும் மனிதனின் மனரீதியான பலவீனத்தைக் கொண்டல்ல!.

ஆன்மிகவாதிகளின் ஆன்மிக அறிவு

நான் உங்களுக்கு இறைவனிடத்திலிருந்து செய்தியைப் பெற்றுத் தருகிறேன் என்று கூறும் ஆன்மிகவாதிகள் உண்மையி லேயே இறைவனிடத்திலிருந்து தான் செய்திகளைப் பெற்றார்களா என்பது அறியப்படவேண்டிய ஒன்று. இதில் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முன்பிருந்தோரை

இணைக்க இயலாது. ஏனெனில் அவர்களில் பலர் உண்மையிலேயே இறைத் தூதர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களைப் பிரித்தறிவது இயலாத ஒன்று. எனவே அவர்களைப் பற்றிய விமர்சனங்கள் தவிர்க்கப்படுகின்றன.

இன்றைய மதங்களின் ஸ்தாபகர்கள் பல மதங்களின் கொள்கைத் துளிகளை எடுத்து ஒன்றிணைத்துக் கொண்டு அவற்றிலிருந்து புதியதோர் மதத்தை உருவாக்கிக் கொண்டார்கள். இதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டுமெனில் சீக்கிய மத ஸ்தாபகர் குருநானக் அவர்களைக் குறிப்பிடலாம்.

""He is Precocious and well versed in Hindu Scriptures'' என்று ''Major Religion of India' எனும் நூலில் ''Sikhism' எனும் அத்தியாயத்தில் அதன் நூலாசிரியர் ''SUSUMA WEERAPERUAM' குறிப்பிடுகிறார்.

மேலும் குருநானக் மக்கா மற்றும் மதீனாவிற்குச் சென்றார் என்ற செய்தி, ''GLIMPESES OF WORLD RELIGIONS' எனும் நூலில் ''Sikhism' என்ற அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் ''JAICO PUBLISHING HOUSE' ன் வெளியீடாகும். இதைப்போல் பல நூல்களில் மேற்கண்ட செய்தி காணப்படுகிறது. உண்மையில் இவர் மக்கா மற்றும் மதீனாவிற்குள் அனுமதிக்கப்பட்டாரா என்ற வாதம் ஒருபுறமிருந்தாலும், இவர் இஸ்லாத்தைப் பற்றி அறிந்துள்ள வராகவே இருந்துள்ளார் என்பது தெளிவாகிறது. இதன் காரணமாக இவரால் உருவாக்கப்பட்ட சீக்கிய மதம் இந்து மற்றும் இஸ்லாமியப் போதனைகளின் கலவையாகவே உள்ளது.

இதே போன்று இந்து மதத்தின் பெரும் ஆன்மிகவாதி எனப்படும் விவேகானந்தர் கூட தன் குருவான இராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம்தான் ஆன்மிக ஞானம்(!) பெற்றார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பிற ஆன்மிகவாதி களைப் போன்று எந்த குரு இடமும் கற்றதில்லை. எவரும் நான் இவருக்குக் கற்றுக் கொடுத்தேன் என்று கூறவுமில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தானாகக் கற்றுக்கொள்ள அரபியில் எவ்வேதமும் அப்போது இல்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அதனையே திருக்குர்ஆன் கீழ்வருமாறு கூறுகிறது:

"அல்லாஹ்வின் மீதும், எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய அவனுடைய தூதர் (முஹம்மதின்) மீதும் இறைநம்பிக்கை கொள்ளுங்கள்..." என 'அல்அ∴ரா∴ப்' எனும் அத்தியாயத்தில் 158-வது வசனம் சான்று பகர்கின்றது.

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் முழுக்க முழுக்க இறைத்தூதராகவே இருந்தார்கள். அவர்கள் இறைவனிடமிருந்தே ஞானம் அனைத்தையும் பெற்றார்கள்.

ஆன்மிகவாதிகளின் வாழ்க்கை நிலை

வாழ்க்கையில் பொருளாதார மேம்பாட்டை அடைவதற்குச் சிலர் இரண்டு வழிகளைக் கையாள்கின்றனர். ஒன்று அரசியல், மற்றொன்று ஆன்மிகம்.

ஆம்! நேற்றுவரை பொருளாதாரத்தில் பின்தங்கிக் கீழ்நிலையில் இருந்தவர்கள், இன்று ஆன்மிகவாதிகளாக ஆனவுடன் சொகுசு வாகனங்களில் வலம் வருகிறார்கள். இவர்களின் ஞான வெளிப்பாடெல்லாம் சுயநலத்தின் அடிப்படையில்தான் தோன்றி இருக்குமோ எனும் சந்தேகத்தை இவர்களின் வாழ்க்கை முறை வலுப்படுத்துகிறது.

இந்த ஆன்மிகவாதிகள் தங்களின் சீடர்களாகச் செல்வந்தர்கள் மற்றும் அரசியல்வாதிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள். இவற்றை யெல்லாம் நிரூபிக்கும் வகையில் இன்றும் பல நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

உதாரணமாக இந்தியாவில் அரசியல் வழி தலைவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் கட்டளையிடும் அளவிற்கு கணிசமான மக்களை தன் பக்தர்களாகக் கொண்டிருக்கும் பாபாக்களில் ஒருவரை எடுத்துக் கொள்ளலாம். பெரும் செல்வம் கைவரப் பெற்ற அவர்,

""AVOID POMP, EXHIBITION AND BOASTING; BE SIMPLE"

"பகட்டு, அலங்காரம் மற்றும் பெருமை ஆகியவற்றைத் தவிர்த்து விடுங்கள்! எளிமையாக இருங்கள்." என்று

Tablets of Truth எனும் நூலில் Sterling Publishers நிறுவன வெளியீட்டில் 74ஆம் பக்கத்தில் கூறியுள்ளார்.

ஆனால் அவர் இதற்கு முற்றிலும் பொருத்தமற்ற நபர் என்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருப்பது உலகறிந்த உண்மை. வறுமையின் விளிம்பிலிருக்கும் கூலித் தொழிலாளியிடம் தன்னைப் பற்றி நம்பிக்கையூட்டிப் பக்தராக்கியுள்ள அவருடைய அகராதியில் எப்போதும் பட்டாடை அணிந்திருப்பதே பகட்டற்ற தன்மை போலும்! சொகுசு வாகனங்களில் வலம் வருவதே எளிமையின் அடையாளம் போலும்!! எளிமையின் முக்கியத்துவத்தை விளக்கும்(?) இந்த ஆன்மிகவாதிகளின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை இதன் மூலம் புரிந்துகொள்ளலாம்.

ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வாழ்க்கை மிகமிக எளிமையானதாகும். மேலும் அவர்களின் வாழ்க்கை வெளிப்படையானதாகவும் இருந்தது. வாய்ப்பிருந்தும்கூட அவர்கள், தாம் படுப்பதற்குப் பட்டுமெத்தைகள் வைத்திருக்க வில்லை. மாறாய் ஈச்ச நாரில் பின்னப்பட்ட கட்டிலில் படுத்ததனால் அவர்களின் உடலில் நார் அழுந்திய தடம் ஏற்படும் அளவிற்கு எளிமையாய் வாழ்ந்தார்கள். ஒரு நாட்டிற்கே ஆட்சியாளராய் இருக்கும் நிலையிலும் இவ்வாறு எளிமையாக வாழ்ந்தார்கள் என்றால் அவரின் எளிமை பற்றி இதற்குமேல் விவரிக்க வேண்டுமா?

இவ்வாறு மனித குலத்தின் அனைத்துத் துறைக்கும் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ள அந்த மாமனிதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வழி நடக்க இந்த மனித குலம் முன்வரவேண்டும்.

## எதிரிகளின் வாக்கு மூலம்

அரபு நாட்டின் வணிகக்கூட்டம் ஒன்று சிரியா நாட்டிற்கு வந்திருக்கும் செய்தி ரோமப் பேரரசின் மன்னர் ஹெர்குலிஸிற்குத் தெரிவிக்கப்படுகிறது. அரபு நாட்டில் 'குறைஷி'கள் என்று அழைக்கப்படும் குலத்தாரின் முக்கியப் பிரமுகர்களில் ஒருவரான அபூஸு ஃப்யான் அவர்களும் அந்த வணிகக் கூட்டத்தில் வந்திருந்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கும் இறைமறுப்பாளர்களுக்கும் இடையே நடந்த 'உஹத்' யுத்தத்தில் அபூஸு ஃப்யான் தலைமை தாங்கியவர். அன்றைய காலகட்டத்தில் முஸ்லிம்களின் பெரும் எதிரிகளில் இவரும் ஒருவர். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களால் போதிக்கப்படும் கொள்கையை எப்படியும் அழித்தாக வேண்டும் என்பதில் குறியாய் இருந்தவர் அபூஸு ஃப்யான்.

அரபு நாட்டு வணிகர்களாகிய அவர்கள் அனைவரும் அரசவைக்கு வருமாறு ஹெர்குலிஸ் மன்னரிடமிருந்து அழைப்பு விடப்படுகிறது. அழைப்பை ஏற்று அனைவரும் மன்னரின் அவைக்குச் செல்கிறார்கள். மன்னர் தம் மொழி பெயர்ப்பாளரையும் அழைத்து வரச்செய்கிறார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பற்றி அவர்களின் எதிரிகளிடம் வாக்கு மூலம் கேட்பதற்காக அரசர் அவர்களை அழைக்கின்றார். பொதுவாக ஒரு நபரைப் பற்றி அவருடைய எதிரியிடம் கருத்துக் கேட்கப்பட்டால், இல்லாததை எல்லாம் சொல்லி இழிவுபடுத்துவதே வழக்கம். ஆனால் இறைத்தூதர்

முஹம்மத்(ஸல்) அவர்களைப் பற்றி அவர்களின் எதிரிகள் கூடப் பொய்யுரைத்து இழிவு செய்ததில்லை. அவர்கள் அனைவரும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் கொள்கையைத்தான் எதிர்த்தார்களே தவிர, அவர்களின் மேன்மையான மனித நேயப் பண்பையோ, ஒழுக்கமுள்ள செயலையோ எதிர்க்கத் துணியவில்லை. இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் குறித்து ரோமப் பேரரசரின் கேள்விகளுக்குப் பொய்யுரைக்க வழியின்றி உண்மையை உரைத்த ஒரு வணிகக்கூட்டத்தின் சம்பவம் வரலாற்று ஏடுகளில் இன்றும் மிளிர்கிறது. அச்செய்தியை புகாரி உள்ளிட்ட பல நூல்கள் பதிவு செய்துள்ளன.

'பைத்துல் முகத்தஸ்' எனும் இறைஇல்லத்தில் அரசர் முகாமிட்டிருக்கிறார். அரசவையில் அமைச்சர்களும், முக்கிய அதிகாரிகளும் கூடி இருக்கிறார்கள். அரசர் அரபு நாட்டு வணிகக் குழுவிடம் பேசத் தொடங்குகிறார்.

அரசர்: தம்மை இறைத்தூதர் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அம்மனிதருக்கு உங்களில் மிக நெருங்கிய உறவுக்காரர் யார்?

அபூஸு ஃப்யான்: நான்

அரசர்: (தம் அதிகாரிகளிடம்) அவரை என்னருகில் அழைத்து வாருங்கள், அவருடன் வந்திருப்போரை அவருக்குப் பின்னால் நிறுத்துங்கள்.

அரசரின் கட்டளைக்கு இணங்க, அனைவரும் அரசருக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார்கள்.

அரசர்: (தம்முடைய மொழி பெயர்ப்பாளரிடம்) அபூஸு ஃப்யான் ஏதாவது பொய்யுரைத்தால் அதை என்னிடம் கூறி விட வேண்டும் என அம்மக்களுக்குக் கூறும்!

அரசரின் கட்டளையை ஏற்ற மொழி பெயர்ப்பாளர் அந்த அரபு வணிகக் கூட்டத்திடம் இதனைச் சொல்கிறார். தாம் பொய்யுரைத்தால் இவர்கள் அரசரிடம் சொல்லி விடுவார்கள் என்ற வெட்கத்தில் அபூஸு ஃப்யான் நிற்கிறார்.

அரசர்: அவருடைய குலம் உங்களில் எத்தகையது?

அபூஸு ஃப்யான்: அவர் எங்களில் உயர்ந்த குலத்தவர்.

அரசர்: இவருக்கு முன்பு உங்களில் யாரேனும் தம்மை இறைத்தூதர் என்று வாதிட்டதுண்டா?

அபூஸு ஃப்யான்: இல்லை.

அரசர்: அவரைப் பின்பற்றுவோர் மக்களில் உயர்ந்தவர்களா? அல்லது சாமானியர்களா?

அபூஸு ஃப்யான்: மக்களில் சாமானியர்கள்தாம்.

அரசர்: அவரைப் பின்பற்றுவோர் அதிகரிக்கின்றனரா அல்லது குறைந்து வருகின்றனரா?

அபூஸு ஃப்யான்: அவர்கள் அதிகரித்துக் கொண்டு தானிருக்கின்றனர்.

அரசர்: அவருடைய மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட பின்பு அதன் மீது அதிருப்தியுற்று யாரேனும் மதம் திரும்பியதுண்டா?

அபூஸு ஃப்யான்: இல்லை.

அரசர்: அவர் இவ்வாறு தம்மை இறைத்தூதர் என்று கூறுவதற்கு முன்பு அவர் 'பொய்யுரைக்கக் கூடியவர்' என்று எப்போதாவது நீங்கள் சந்தேகித்ததுண்டா?

அபூஸு ஃப்யான்: இல்லை.

அரசர்: அவர் எப்போதாவது வாக்கு மீறி இருக்கிறாரா?

அபூஸு ஃப்யான்: இது வரை இல்லை. இப்போது அவருடன் நாங்கள் ஓர் உடன்படிக்கை செய்துள்ளோம். அவர் அதில் எப்படி நடந்து கொள்ளப்போகிறார் என்பது எங்களுக்குத் தெரியாது.

அரசர்: அவருடன் நீங்கள் போர் புரிந்திருக்கின்றீர்களா?

அபூஸு ஃப்யான்: ஆம்.

அரசர்: அவருடன் நீங்கள் நடத்திய போரின் முடிவுகள் எவ்வாறு இருந்தன?

அபூஸு ஃப்யான்: எங்களுக்கும் அவருக்கும் வெற்றியும், தோல்வியும் மாறிமாறி வந்திருக்கின்றன. சில சமயம் அவர் எங்களை வென்றிருக்கிறார், சில சமயம் நாங்கள் அவரை வென்றிருக்கின்றோம்.

அரசர்: அவர் உங்களுக்கு என்ன ஏவுகிறார்?

அபூஸு ஃப்யான்: இறைவன் ஒருவனை மட்டுமே வணங்குங்கள். அவனுக்கு எதையும் இணையாக்காதீர்கள். உங்கள் முன்னோர்கள் கூறியவற்றை எல்லாம் விட்டுவிடுங்கள் என்கிறார். தொழுகை, உண்மை, கற்பு நெறி, உறவினர்களுடன் இணங்கி வாழுதல் போன்ற பண்புகளை ஏவுகிறார்.

அரசர்: (தம்முடைய மொழி பெயர்ப்பாளரை நோக்கி) நான் சொல்வதை எல்லாம் அவர்களிடம் மொழி பெயர்த்துக் கூறும்!

மொழி பெயர்ப்பாளர் தயாராக நிற்கிறார்.

அரசர்: அவருடைய குலத்தைப் பற்றி உம்மிடம் நான் விசாரித்ததற்கு அவர் உங்களில் உயர்ந்த குலத்தைச் சார்ந்தவர்தாம் என்று நீர் குறிப்பிட்டீர். இறைத்தூதர்கள் அனைவரும் இப்படித்தான் அவர்கள் வாழும் சமூகத்தில் உயர்ந்த குலத்தில் அனுப்பப் பட்டுள்ளார்கள்.

தாம் இறைத்தூதர் என்ற இவ்வாதத்தை உங்களில் யாரேனும் இவருக்கு முன்பு செய்ததுண்டா என்று நான் கேட்டதற்கு நீர் இல்லை என்று குறிப்பிட்டீர். இவருக்கு முன் யாரேனும் இவ்வாறு வாதம் செய்திருந்தால் முன்னர் செய்யப்பட்டு வந்த வாதத்தை வைத்துத் தான் இவரும் வாதம் செய்துவருகிறார் என்று நான் கூறி இருப்பேன்.

இவருடைய முன்னோர்கள் யாரேனும் மன்னராக இருந்திருக்கிறார்களா? என்று நான் உம்மிடம் கேட்டதற்கு நீர் இல்லை என்று குறிப்பிட்டீர். இவருடைய முன்னோர்களில் யாரேனும் மன்னராக இருந்திருப்பின், இவர் தம் முன்னோரின் ஆட்சியை அடைய விரும்பும் ஒரு மனிதர் என்று நான் கூறி இருப்பேன்.

இவ்வாதத்தை அவர் எடுத்து வைப்பதற்கு முன்பு அவர் ’பொய் சொல்லக்கூடியவர்‘ என்று நீங்கள் அவரைச் சந்தேகித்ததுண்டா என்று நான் உம்மிடம் கேட்டதற்கு நீர் இல்லை என்று குறிப்பிட்டீர். மக்களிடம் பொய் சொல்லத் துணியாத ஒருவர் இறைவன் விஷயத்திலும் பொய் சொல்லமாட்டார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மக்களில் சிறப்புவாய்ந்தவர்கள் அவரைப் பின்பற்றுகின்றனரா அல்லது சாமானியர்கள் அவரைப் பின்பற்றுகின்றனரா, என்று நான் உம்மிடம் கேட்டதற்குச் சாமானிய மக்கள்தாம் அவரைப் பின்பற்றுகிறார்கள் என்று நீர் குறிப்பிட்டீர். இறைத்தூதர்களை இப்படிப்பட்டவர்களே தொடக்கத்தில் பின்பற்றுவோராக இருந்திருக்கின்றனர்.

அவரைப் பின்பற்றுகின்றவர்கள் அதிகரிக்கின்றனரா அல்லது குறைந்து வருகின்றனரா என்று நான் உம்மிடம் கேட்டதற்கு அவர்கள் அதிகரித்து வருகின்றனர் என்று நீர் குறிப்பிட்டீர். இறை நம்பிக்கை நிறைவு பெறும் வரை இப்படித்தான் (வளர்ந்து கொண்டே) இருக்கும்.

இவருடைய மார்க்கத்தில் நுழைந்த பின்னர் அதிருப்தியுற்று யாரேனும் மதம் மாறி இருக்கின்றனரா என்று நான் உம்மிடம் கேட்டதற்கு நீர் இல்லை என்று குறிப்பிட்டீர். இதயத்தில் நுழைந்து விட்ட இறைநம்பிக்கையின் எழில் இப்படித்தான் (உறுதியானதாக) இருக்கும்.

அவர் எப்போதேனும் வாக்கு மாறியதுண்டா என்று நான் உம்மிடம் கேட்டதற்கு நீர் இல்லை என்று குறிப்பிட்டீர். இறைத்தூதர்கள் இவ்வாறே வாக்கு மீறாதிருப்பார்கள்.

அவர் உங்களுக்கு எதைக் கட்டளையிடுகிறார் என்று நான் உம்மிடம் கேட்டதற்கு இறைவன் ஒருவனை மட்டுமே வணங்க வேண்டும் என்றும், அவனுக்கு எதனையும் இணையாக்கக் கூடாது என்றும் அவர் உங்களுக்கு ஏவுவதாகவும், சிலை வணக்கங் களிலிருந்து அவர் உங்களைத் தடுப்பதாகவும், தொழுகை, உண்மை, கற்புநெறி ஆகியவற்றை ஏவுவதாகவும் நீர் கூறினீர். நீர் கூறியவை அனைத்தும் உண்மையானால் (ஒரு காலத்தில்) என்னுடைய இரு பாதங்களுக்குக் கீழுள்ள இந்த இடத்தையும் அவர் ஆள்வார். (விரைவில் இப்படிப்பட்ட) இறைத்தூதர் ஒருவர் அனுப்பப்படுவார் என்று நான் முன்பே அறிந்திருந்தேன்.

ஆனால் அவர் (அரபிகளாகிய) உங்களில் தாம் தோன்றுவார் என்று நான் கருதவில்லை. அவரைச் சென்றடையும் வழியை நான் அறிந்திருந்தால் மிகச் சிரமப்பட்டாவது அவரைச் சந்தித்திருப்பேன். (இப்போது) நான் அவர் அருகே இருந்தால் அவருடைய பாதங்களைக் கழுவிவிடுவேன்.

மன்னர் இதைக் கூறிவிட்டு புஸ்ராவின் ஆளுநர் மூலம் தம்மிடம் கொடுப்பதற்காக இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் கொடுத்து அனுப்பிய கடிதத்தைத் தருமாறு ஆணையிட்டார். ஆளுநர் அதை மன்னரிடம் ஒப்படைத்தார். மன்னர் அதைப் படித்துப் பார்த்தார். அக்கடிதத்தில்:

அளவற்ற அருளாளனும் நிகரில்லா அன்புடையோனுமாகிய ஏக இறைவனின் திருப்பெயரால்...

இறைவனின் அடியாரும், அவனுடைய தூதருமான முஹம்மத் என்பவர், ரோமாபுரிச் சக்கரவர்த்தி ஹெர்குலிஸ் அவர்களுக்கு எழுதிக் கொள்வது. நேர்வழியைப் பின்பற்றுவோர் மீது சாந்தி நிலவட்டுமாக! நிற்க, இஸ்லாத்தைத் தழுவுமாறு உமக்கு நான் அழைப்புவிடுக்கின்றேன்! நீர் இஸ்லாத்தை ஏற்பீராக! இதனால் நீர் ஈடேற்றம் பெறுவீராக! இறைவன் உமக்கு இரு மடங்கு சன்மானம் வழங்குவான். (இவ்வழைப்பை) நீர் புறக்கணித்தால் உம்முடைய குடிமக்களின் பாவமும் உம்மைச் சாரும்!

வேதக்காரர்களே! நாம் இறைவனைத் தவிர்த்து (வேறு எவரையும்) வணங்கக் கூடாது அவனுக்கு எதையும் இணையாக்கக் கூடாது இறைவனை விட்டுவிட்டு நம்மில் சிலர், சிலரை நம்முடைய இரட்சகர்களாக ஆக்கிக் கொள்ளக் கூடாது எங்களுக்கும் உங்களுக்கும் உள்ள பொதுவான ஒரு கொள்கையை நோக்கி வந்துவிடுங்கள். (இக்கொள்கையை) நீங்கள் (ஏற்க மறுத்து) புறக்கணித்தால், நாங்கள் (அந்த ஒரே இறைவனுக்குக் கீழ்படிந்த) முஸ்லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சியாளர்களாக ஆகிவிடுங்கள் என்று எழுதப்பட்டிருந்தது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களைப் பற்றி அவர்களுடைய எதிரிகளின் வாக்கு மூலத்தையும், இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் அழைப்பையும் கண்ட மன்னர் ஹெர்குலிஸ் வியப்பில் ஆழ்ந்தார். உண்மை நிலையை அறிந்து கொண்டார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் அந்த அழைப்பு ஹெர்குலிஸ் மன்னருக்கு மட்டுமல்ல. இன்றைய உலக நாடுகளின் அதிபர்கள், தலைவர்கள், பிரதமர்கள், ஆளுநர்கள் மற்றும் பொது மக்கள்

அனைவருக்கும் உரியதாகும். இவர்கள் அனைவரும் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் அழைப்பை ஏற்பார்களாயின், ஈருலக வெற்றிக்குச் சொந்தக்காரர்கள் ஆவர்.

இறைவனும், இறைவனை மட்டுமே நம்பி வாழ்வோரும் உலக மக்களிடம் இதை மட்டுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இறைவன் எங்களுக்கு அளித்துள்ள இச்செய்தியை தங்களுக்குத் தெரிவித்ததற்கு நாளை மறுமையில் தாங்களே சாட்சிகளாவீர்கள்.